# கீதாசார்யன்-69

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே



தொகுதி 6 | ரக்தாக்ஷி வருடம் | ஆனி மீ | ஜூன் 84 | பகுதி



ஆசிரியர்:

**M. A. வேங்கடகிருஷ்ணன் M. A. M,**

இயக்குநர் குழு:

T. C. A. ராமானுஜம்
M.A. B.L. I.R.S. (தலைவர்)

N. கணபதி
விற்பனை இயக்குநர்

R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்புஇயக்குநர்

P. T. ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

ஆலோசனைக் குழு:

சாண்டில்

K. R. ஸ்ரீநிவாச

Dr. V. V. ராமானுஜம்

S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியார்

K. E. B. ரங்கராஜன்

7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

வருடச்சந்தா
ரூ-15-00

தனிப்பிரதி
விலை ரூ 1-25

# கூடலூர்

ஆடுதுறைப் பெருமாள் கோயில் என்று வழங்கப்படும் இத்தலம் கும்பகோணம் திருவையாறு பஸ் மார்க்கத்தில் திருவையாற்றுக்குக் கிழக்கே 7 மைலிலும் கபிஸ்தலத்திற்கு மேற்கே 3 மைலிலும் அமைந்துள்ளது. வசதிகள் எதுவுமில்லாத சிறு கிராமம்.

பெருமாள் திருநாமம் வையங்காத்த பெரு[illegible]ள் (ஜகத் ரக்ஷகன்). பத்மாஸனவல்லித் [illegible] சுத்தஸத்வ விமானம்; சக்ரதீர்த்தம். [illegible] நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலமாய் எழுந்தருளியிருக்கிறார். நந்தக மகரிஷிக்கு ப்ரத்யக்ஷம.

திருமங்கையாழ்வார் "தாம் தம் பெருமை அறியார்" என்ற (பெரிய திருமொழி 5-2) பதிகத்தில் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

# அடியேனை ஆட்கொண்ட அண்ணா

## 2. பததுடை அடியவர்க்கு எளியவர்

பகவான் எண்ணிறந்த குணங்களையுடையவன். அவற்றில் மிகமிக உயர்ந்த குணம் எது? அவனுடைய மேன்மையா (பரத்வம்) அல்லது எளிமையா (சீலம்) என்று கேட்டால் அறப்பெரியவனாக வுள்ளவன் தன் மேன்மை பாராட்டாமல் சாதாரணமானவர்களுடனும் இரண்டற கலந்து பரிமாறும் எளிமைக் குணமே சிறந்தது என்பர் ஆன்றோர்.

பகவான் எல்லா மேன்மைகளுடனும் ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருந்தும் திருப்தியடையாமல் இவ்வுலகில் மனிதர்களிடையே தானும் ஒரு மனிதனாய்த் திருவவதாரம் செய்தது அவனுடைய எளிமையைக் காட்டுகிறது. அப்படி அவன் ஸ்ரீராமனாய் அவதரித்தபோது, தான் மூவுலகிலும் புகழ் பெற்ற தசரத சக்ரவர்த்தியின் மகனாய்ப் பிறந்திருந்தும் கூட குகனோடும்—சபரியோடும் — சுக்ரீவனோடும்—விபீஷணனோடும் கலந்து பழகினானே! - ஏழை ஏதலன் — கீழ் மகன் — மற்கடம் — விலங்கு—மற்றோர்சாதி என்றெல்லாம் எண்ணாமல் புரையறக் கலந்து பழகினானே —அந்த சீல குணத்தில்தான் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் ஈடுபடுகிறார்கள்.


இந்த சீலகுணம் என்பது எம்பெருமானைத் தவிர மற்றவர்களுக்கு அமைவது அரிது. அதனினும் அரிது இந்த

எளிமைக்குணம் வித்வான்களிடையே அமைவது. மிகப் பெரிய ஞானியாய், பலகலைக் கல்விகளைக் கற்ற வித்வானாய் இருக்கும் ஒருவர், எல்லாவகையிலும் தம்மைக் காட்டிலும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களிடம் சிறுமை பெருமை பாராட்டாமல் கலந்து பழகுவது என்பது மிகவும் துர்லபம். எம்பெருமானையும் பூர்வாசார்யர்களையுமொத்த அவதார புருஷர்களிடையேதான் இத்தகைய அருங்குணம் அமையும். அப்படி ஓர் அவதாரபுருஷராய் எழுந்தருளியிருந்தவர்தான் ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி.

ஸ்வாமியின் பெருமைக்கும், புகழிற்கும், ஞானத்திற்கும் எதிரே அடியேன் ஒரு தூசு. அற்பனான அடியேன் மீதும் ஸ்வாமி தம் கருணை வெள்ளத்தைப் பொழிந்து தம் லகுணத்தை நிலைநாட்டிவிட்டார். அடியேன் மீது டுமேயல்ல, ஆயி க்கணக்கானவர் மீது தமது சீலகுணத் தைப் பொழிந்து பற்பல அரிய அனுபவங்களை அளித்திருக் ர். அடியேனுக்கு ஏற்பட்ட அரிய அனுபவங்களில் ற்றை ஸ்ரீஸ்வாமியின் வருஷாப்திக மஹோத்ஸவம் பெறும் இத்தருணத்தில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள ம்புகிறேன்.

சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்பு ஸ்வாமியின் 90வது திருநக்ஷத்ர பூர்த்தியையொட்டி கீதாசார்யனில் ஒரு சிறப்புமலர் வெளியிட்டபோது அதில் 'அடியேனை ஆட்கொண்ட அண்ணா' என்றொரு கட்டுரை எழுத எண்ணினேன்; ஸ்வாமி அடியேனைக் குட்ட வேண்டிய இடத்தில் குட்டியும் பாராட்டத் தோன்றிய இடத்தில் பாராட்டியும் கடிதம் மூலமாகவே அறிவுரைகள் வழங்கியும் பணிமானம் பிழை

யாமே அடியேனைப் பணிகொண்ட விதத்தை அக்கட்டுரையில் விவரிக்க எண்ணி ஸ்வாமியிடம் அனுமதி வேண்டினேன் ஸ்வாமி அடியேனுக்கு எழுதிய பதில் .....




ஸ்வாமியே மனமுவந்து இப்படி எழுதியருளியவுடன் கட்டுரையை எழுதி கீதாசார்யனில் வெளியிட்டேன். ஸ்வாமியின் கிருபையாலும் கடாக்ஷத்தாலும், அக்கட்டுரை மிக அழகாக அமைந்திருந்ததென அனைவராலும் பாராட்டப்பெற்றது. மற்றவர் பாராட்டு இருக்கட்டும். அக்கட்டுரையைப் பார்த்து ஸ்வாமி எழுதியருளிய பாராட்டைப்பார்த்தால்—எல்லையற்ற சீலகுணம் உடைய ஒருவரால்தான் இப்படி எழுத முடியும் என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டே தீருவர்.

நீ எழுதினது ஆச்சரியமில்லை.
இப்படி யிப்படியெழுத வேணுமென்று முன்பே
Plan போட்டது மிகமிக ஆச்சரியமா
கண்ணெதிரில் படாதிருக்கிறது
இவ்வளவு நீ படித்திருக்கவே
ணுமே. सर्वथा सुकरं प्रेम
दुष्करं परिपालनम् என்பா
ரோ. ஒன்று எளிதாக நடத்திக் கொண்
டு விடலாம் அதைக் காப்பாற்றிக் கொண்
டு வந்து அருகே இருந்து நோக்கமும்
கொண்டும் பலவாறு நின்று உன்
பெருமைகளையெல்லாம் கண்டு களிக்கவே
ணுமென்று ஆசை. இவ்வளவு கண்
டபின்பு இனிமேல் அதிகம் ...
... நிதானமாக உன்னைப் பார்த்து
விட்டு பேச்சு வேணும்.

"உனக்கு உண்டாகியிருக்கும் பெருமைகளுக்கெல்லாம் நானே காரணமென்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்று முன் கடிதத்தில் ஸ்வாமி எழுதியிருந்தது நூற்றுக்கு நூறு உண்மை. ஸ்வாமி காரணமாக இருந்தபடியால்தான் அடியேனுடைய சிறுபணிகளும் பெருமை அடைகின்றன என்பது


தான் உண்மை. உதாரணமாக கீதாசார்யன் தோற்றத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அச்சகத்துறையில் ஸ்வாமி அடியேனுக்களித்திருந்த பயிற்சியைக் கொண்டு ஒரு ஸம்ப்ரதாய பத்திரிகையைத் துவங்க வேண்டும் என்ற விருப்பத்தை அடியேன் ஸ்வாமியிடம் தெரிவித்தேன். அதற்கொரு பெயரையும் வெளியிட வேண்டிய தாளையுங்கூட ஸ்வாமி தாமே தேர்ந்தெடுத்து உடனடியாகக் கடிதமெழுதினர்:




ஸ்வாமி தாமே ஒரு பத்திரிகை ஆசிரியராய் இருந்துவைத்தும், புல்லறிவாளனை அடியேனுக்கு இவ்வளவு ஆலோசனைகள் கூறியதோடல்லாமல் "நாளடைவில் ஸ்ரீராமானுஜனை நானே நிறுத்திக் கொள்ளும்படியாகவேணும்" என்று மனமுவந்து எழுதிய சீல குணத்தை என்னவென்பது? ஸ்வாமியைத் தவிர வேறு யாருக்கு இப்படி எழுத மனம் வரும்? ஸ்வாமியின் கருணை வெள்ளத்தையே மூலதனமாகக் கொண்டு 'கீதாசார்யன்' தொடங்கப்பட்டதும் கண்ணும்

கருத்துமாக ஊன்றிக் கவனித்து அவ்வப்போது அடியேனுக்கு கடிதங்கள் மூலமாகவே அறிவுரை வழங்கி வந்தார்.

ஸ்வாமியின் ஞானத்திற்கு எதிரே அடியேன் நீசனேன் நிறைவொன்றுமிலேன். அப்படியிருந்தும் அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்து பொருளல்லாத வென்னையும் பொருளாக்கி திருத்திப் பணி கொள்வதோடல்லாமல் "நான் தவிர வேறுயாரும் உனக்குத் தெரிவிக்கமாட்டார்கள்" என்றும் "உன்னைத்திருத்த எனக்கு உரிமை உண்டல்லவா?" என்றும் எழுதுமளவுக்கு எளிமையை வேறுயாரிடம் நாம் காண முடியும்? அப்படிப்பட்ட ஸ்ரீ முகங்களில் சிலவற்றை நீங்களே பாருங்கள் :





17-5-62 [illegible]

[illegible]

[illegible] जानासि।

[illegible] னில்

[illegible] ழங்கி

[illegible] க்கும்

[illegible] ருது

[illegible]

ஸ்ரீதாசார்யனில் ஸ்வாமியின் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஒரு முறை ஸ்வாமி எழுதியுள்ள ஒரு நூலை தொடர்ந்து பிரசுரம் செய்வதற்கு ஸ்வாமியின் அநுமதியைக்கேட்ட போது ஸ்வாமி எழுதிய பதில்:

जय विजयी भव [illegible]



[illegible]

'என்றன்னை விற்கவும் பெறுவாய்'' என்றும் ''என்னை அடகு வைத்து நீ எவ்வளவும் கடன் வாங்கலாம். என்னை நீ அனுமதி கேட்பது அநீதி. உன்னைக் கொண்டென்னுள்வைத் தேன். என்னையும் உன்னிலிட்டேன்'' என்றிப்படி எழுத வேறு யாருக்கேனும் மனம் வருமா? அதிமாநுஷ ஸ்தவத்தில் கூரத்தாழ்வான் சக்ரவர்த்தி திருமகனுடைய சீலகுணத்திலீடுபடும்போது ''கோயம் குண: கதரகோடிகத: கியாந்வா கஸ்யஸ்துதே: பதமஹோ பதகஸ்ய பூமி:'' (இது என்ன குணம்! எந்த வகுப்பில் வைக்கத் தகுந்தது! எவ்வள வென்று மதிப்பிடத்தக்கது! யார் துதிக்கலாவது! யாருக்கு நிலமாவது!) என்றெல்லாம் மாய்ந்துபோகிறார். ஸ்வாமி யினுடைய சீலகுணத்தை நினைக்கும் போதெல்லாம் அடியே னுக்கு இந்த சுலோகம்தான் நினைவுக்கு வருகிறது.

...ாமிக்கு திருநக்ஷத்ரம் அதிகமாகி அசக்தியின் கனம் ... நாள் ஏறிக்கொண்டே இருந்தாலும் தம் ஸம்ப்ர... பணிகளை ஒரு குறைவுமில்லாமல் வழக்கம்போல் ...சய்து வரவேண்டுமென்ற அவா ஸ்வாமிக்கு இருந்து கொண்டே இருந்தது. இதை ஸ்வாமியே ஒரு ஸ்ரீமுகத்தில் ஸாதிக்கிறார்........


..பழைய புத்தகங்களைப் புர
ட்டிப் பார்த்த போது இதை Reprint
பண்ணலாமா? அதை நீ --- என்னுடைய ம
னம் அபிப்ராயிக்கிறது. எனக்கு ஒத்தவன்
நீ. உனக்கு ஒத்தவன் நான். நம் இரு
வரைப் போல் வேறொருவரும் கி
டைத்திலான். பண்டைநெறிவிட்ட
தைப்பற்றிப் பின்வாங்கார். அன்று
[illegible]

இப்படி ஸ்வாமி கீதாசார்யன் பதிப்பு விஷயங்களில் அக்கறை எடுத்துக்கொண்டு ஆலோசனைகள் வழங்கி வந்ததோடல்லாமல் தம்முடைய நூல்களைப் பதிப்பிக்கும் பணியிலும் அடியேனுக்கு ஒரு சிறு பங்கு அளித்தது அடியேன் மீது அவர் கொண்டிருந்த க்ருபையையே காட்டுகிறது. ஸ்வாமியின் நியமனப்படியே பற்பல நூல்களை திருவல்லிக்கேணியிலேயே பதிப்பித்து ஸ்வாமிக்கு அனுப்பி வந்தேன்.

அறியா மாமாயத்து அடியேனை அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து கொஞ்சம் கொஞ்சமாக ஸம்ப்ரதாய அறிவையும் புகுத்தி உங்களிடையே அடியேனையும் ஒரு மனிதனாக நடமாடச் செய்தவர் ஸ்வாமிதான். இதையும் தவிர ஸ்வாமி அடியேனை உபந்யாஸங்கள் செய்யும்படி அடிக்கடி ஊக்குவித்துவந்தார். சுமார் 5 வயது முதற்கொண்டே அடியேன் ஸ்வாமியின் திருப்பாவை உபந்யாசங்களுக்குச் செல்லும் வழக்கமுடையவன். அப்போதெல்லாம் இடையிடையே பாசுரங்களை உரக்கச்


சொல்லும்படி அடியேனை நியமிப்பார். முதலில் ஆயிரக் கணக்கானவர் முன்பு தனியாக உரக்த குரலில் சொல்வதற்கு நடுக்கமாக இருந்தாலும், ஸ்வாமி கொடுத்த தைரியத்தால் சில வருடங்களில் படிப்படியாக நடுக்கம் குறைந்தது.

ஓரளவு அடியேனுக்கு தைரியத்தை ஊட்டிய பின் அடியேனையும் உபந்யாஸம் செய்ய ஆரம்பிக்கும்படி நியமித்தார். ஆனால் அடியேன் அதற்குரிய ஞானம் அடியேனுக்குக் கிடையாது என்று கூறியபோது 'ஜலத்தில் இறங்கித்தான் நீந்தக் கற்றுக் கொள்ள முடியுமே தவிர நீந்தக் கற்றுக் கொண்டுதான் ஜலத்தில் இறங்குவேன் என்றால் அது நடவாத காரியம்'' என்று கூறி, தமது உபந்யாஸங்களிடையே அடியேனையும் ஒரு சில வார்த்தைகள் பேசச் செய்தார். அப்போது அடியேனுக்கிருந்த அவைக் கூச்சத்தையும் ஸ்வாமியே தைரியமூட்டி நீக்கினார். பிறகு அதைப்பற்றி அடியேனுக்கு எழுதிய ஒருஸ்ரீ முகத்தில்



என்றெழுதி உற்சாகமூட்டினார். ஆனால் ஸ்வாமிக்கு அடியேன் மீதிருக்கும் அளவற்ற ப்ரீதி காரணமாகவே இப்படியெல்லாம் எழுதுகிறார் என்று முடிவுகட்டினேன் அடியேன். ஆனால் ஸ்வாமி கடந்த வருடத்தில் எழுதிய மற்றொரு

கடிதம் அடியேனை உண்மையிலேயே திகைப்படையச் செய்து விட்டது.



ஸ்வாமி இப்படி எழுதக் காரணமென்னவென்றே புரியவில்லை அடியேனுக்கு. ஆனல் புரிவதற்குள் ஸ்வாமி திருநாட்டலங்கரித்து விட்டார்.

ஸ்வாமி அடியேன் மீது அளவற்ற ப்ரீதியை வைத்திருந்தார் என்று பெருமை பறைசாற்றிக் கொள்வதற்காக இக் கட்டுரையை அடியேன் எழுதவில்லை. அடியேனைப் போலவே பற்பலரும் ஸ்வாமியிடம் இம்மாதிரியான அனுபவங்களைப் பெற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. (வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது போல) ஞானக்கடலான ஸ்வாமி புல்லுக்குச் சமமான அடியேனையும் திருத்திப் பணி கொண்டு ஸம்ப்ரதாயப்பணிகளில் ஈடுபடுத்தி வைத்த சில குணத்தைப் பற்றி தெரிவிப்பதற்காகவே இந்நீண்ட கட்டுரையை எழுதுகிறேன். குற்றம் குறையிருந்தால் பொறுத்தருள்க.

வேங்கடகிருஷ்ணன்

# ஸுதர்சனர் பதில்

V. ஸ்ரீநிவாஸன் ஸ்ரீரங்கம்.

36. 29-4-84 கல்கியில் ஆனந்தி எழுதிவரும் தெய்வ தரிசனக் கட்டுரையில் "நரசிங்கனை சிவன் சரபமாய் வந்து அடக்கிவிட்டான்" என்னும் தாமஸபுராணக் கதை படத்துடன் விளக்கப்பட்டு "இந்த சரபத்தைப் பற்றி ருக்வேதத்திலும் யஜுர்வேதத்திலும் உள்ளது" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மையா?

---

ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்

---

இது பெரும்பொய். வேதத்தில் இந்தக் கதை இல்லை என்பது மாத்திரமல்ல. நமது நாட்டில் மிகப்பழைய நூல் என ஸ்ரீராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இது கிடையாது. ஆயிரம் வருஷத்துக்கு முற்பட்ட வடமொழிக் காவியம் எதிலும் இது கிடையாது சங்க நூல்களிலும் ஆயிரம் வருஷந்துக்கு முற்பட்ட எந்தத் தமிழ்க் காப்பியத்திலும் இந்தக் கதை கிடையாது. சான்றோர்கள் கையாளாத தாமஸபுராணங்களிலும், அவைகளையொட்டி எழுந்த நாயன்மார்களது நூல்களிலுமே இது காணப்படுகின்றது. இவ்வொரு கதை மாத்திரமல்ல. விஷ்ணுவைத் தாழ்த்துவதாலேயே சிவனுக்குப் பெருமை ஏற்பட்டுவிடும் என்று மனப்பால் குடித்து, நாயன்மார்கள் 'திருமாலுடைய மத்ஸ்ய கூர்மவராக நரஸிம்ஹ த்ரிவிக்ரம வதாரங்கள் ஒவ்வொன்றையுமே சிவன் பங்கப்படுத்திவிட்டான் என்று பொய்க் கதைகளை எழுதி வைத்தார்கள். காளிதாஸன் போன்ற சிவபக்த கவிகளாலும் கையாளப்படாததிலிருந்து இவை அபாண்டமான பொய்க் கதைகள் என்று நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும். "சரபமூர்த்தியின் வழிபாடு தென்னகத்தில் பிற்காலச்சோழர்கள் காலத்தில்தான்

தோன்றியது என்பது வரலாறு. மூன்றும் குலோத்துங்கன் 1210ம் ஆண்டில் தன் ஆட்சியின் சிகரத்தில் இதை (திரிபுவன சரபக்கோவிலை)க் கட்டினன்'' என்று ஆனந்தி எழுதியிருப்பதிலிருந்தே இக்கதை பிற்காலக் கற்பனை என்று விளங்குகிறது.

S சௌம்யநாராயணன், ஸ்ரீரங்கம்.

37. 29-4-84 விகடனில் பரணீதரனின் திருத்தலப் பெருமை கட்டுரையில் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மருத்துவக்குடி என்னும் தலத்தைபபற்றி பிரம்மாண்ட புராணம், கந்தபுராணம் மச்சபுராணம், கூர்மபுராணம் இலிங்கபுராணம், விமானபுராணம், மார்க்கண்டேய புராணம், நாரதீயபுராணம், சைவம் பாயனேயம் ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளது என்று எழுதி தமிழில் சில வரிகளையும் மேற்கோள் காட்டி பட்டுள்ளது. புராணங்களின் பாஷை வடமொழியா? தமிழா?

புராணங்கள் வடமொழியிலேயே இயற்றப்பட்டன. ஒரு சில நூற்றுண்டுகளுக்குள் சிலர் தமிழ்ப்புராணங்கள் பாடினார்கள். வடமொழிப்புராணங்களிலேயே ஸாத்விக புராணங்களைத் தவிர மற்ற புராணங்களைச் சான்றோர்கள் ஏற்பதில்லை. ஒவ்வொரு தலங்களுக்கும் பெருமை கூறுவதற காகவே வடமொழிப் புராணங்கள் ஏற்பட்டதற்குப் பல நூற்றுண்டுகளுக்குப்பின் தமிழ் அறிந்தபெரும் பொய்யர் களால் எழுதிவைக்கப்பட்ட தமிழ்ப்புராணங்களுக்கு எந்த மதிப்பும் கிடையாது. அழகான வேதாந்தக் கொள்கை களும், தத்துவஹிதபுருஷார்த்த விவரணங்களும் நிரம்பிய நமது வைதிகமதத்தைக் குட்டிசுவராக்கித் தலபுராணமத மாகச் செய்வதற்காகவே பத்திரிகைகள் அருப்பாடு படுகின்ற. இந்தத் தலபுராணக் கதைகளை நாளுக்கு

நாள் அறிவுமுன்னேறி வரும் இந்த விஞ்ஞானயுகத்தில் எவராவது நம்புவார்களா என்பதைக்கூடப் பகுத்தறிய மாட்டாமல் காமகோடி பெரியவரின் உத்தரவின்படி இப்பத்திரிகைகள் இத்தகைய பிரம்மாண்டப் பொய்களைப் பிடிவாதமாக வெளியிட்டு வருவது 'வைதிகமதங்களைக் குழிதோண்டிப்புதைப்பதையொக்கும். அடுத்த நூற்றாண்டில் கிறிஸ்துவமும், இஸ்லாமும், நாத்திகமும் வளரவே இக்கட்டுரைத் தொடர்கள் வழிகோலுகின்றன.

**R. ஜகந்நாதன், தாராபுரம்**

**38. 22-4-84 'ராணி'ப் பத்திரிகை 23ம் பக்கத்தில் "ச. கணபதிராமன்" என்பவர் "கருப்பனே கண்ணன்; சுடலையே சிவன்" என்ற கட்டுரையில் "சிறு தெய்வமான கருப்பனே முதலில் வழிப்படப்பட்டான். இந்தக் கருப்பனே பின்னாலே 'கண்ணன்' ஆகிவிட்டான்" என்று கூறியுள்ளார். இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.**

இதை எழுதியவருக்கு வடமொழி தென்மொழி நூல்களில் பழக்கமே இல்லை என்று விளங்குகிறது. வேதம் இதிஹாஸபுராணங்கள் முதலான வடமொழி நூல்களிலும் சங்கநூல்கள் முதலான தமிழ்நூல்களிலும் கார்முகில் வண்ணனான திருமாலே முழுமுதற்கடவுளாக முழங்கப் பட்டுள்ளான். கருப்பன் காட்டேறி முதலான சிறுதெய்வங்களைப்பற்றி அந்நூல்களில் ஏதுமில்லை. இக்கட்டுரை ஆசிரியர் போன்ற மொழியறிவற்றவர்கள் பிதற்றுவது விஷ்ணுத்வேஷத்தாலேயே என்பதை எளிதில் உணரலாம்.

**T ஸ்ரீநிவாஸன் ஸ்ரீரங்கம்.**

**39. 22-4-84 "தினமலர்" வாரமலரில் "விஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கி, பிள்ளையார் வாயில்**

போட்டுக்கொண்டு விட்டார். விஷ்ணு தனது நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு குதித்தார். இதுகண்டு விநாயகர் சிரிக்கவே வாயிலிருந்து சக்கரம் கீழே விழ விஷ்ணு அதை எடுத்துக் கொண்டுபோய் விட்டார். "'தோர்பி: கரணம்'' (கைகளால் காதைப் பிடித்தல்) என்பதே தோப்பிக் கரணம் என்றாகி விட்டது'' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு ஏதேனும் ஆதாரமுண்டா?

இதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. ஆதாரமற்ற கதைகளை எழுதுவதில் வல்லவரான காமகோடிப் பெரியார் கற்பித்தது இக்கதை. இதை அவருடைய அபிமானிகள் திருப்பித் திருப்பி எழுதுகிறார்கள் தோற்றவன் வெற்றி பெற்றவனுக்கு முன்னால் காதைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து எழுந்திருப்பது என்னும் வழக்கமே தமிழில் "தோற்புக்கரணம்'' என்று பெயரிடப்பெற்று ''தோப்புக கரணம்'' என்று மருவியிருக்கிறது. வடமொழியறியா பாமரமக்களாலே வழங்கப்படும் தமிழ்ச்சொல்லே இது. தமிழ் அறியாத எவரும் இச்சொல்லை வழங்குவதே இல்லை. இதிலிருந்தே இது காமகோடியின் விபரீதக்கற்பனையே என்று எளிதில் உணரலாம்.

S. முரளி அந்தணல்லூர்

40. 1984 மே "ஞானபூமி''யில் ''மகேஸ்வரன் கையில் மகா சுதர்சனமா?'' என்னும் கட்டுரையில் ''திருமால் தன் கண்ணைப்பிடுங்கிச் சிவனை அர்ச்சனை செய்து 'கண்ணன்' என்ற பெயரையும் மகாசுதர்சனத்தையும் பெற்றார்'' என்னும் தாமஸபுராணக்கதை எழுதப் பட்டுள்ளது. இதற்குச் சித்திரமும் தீட்டப்பட்டுள்ளது. இதை விமர்சித்து இத்தகைய கதையைப் பிரசாரம் செய்பவர்களுக்கு என்ன பயன் ஏற்படும் என்பதையும் விளக்கவேண்டுகின்றேன்.

சாந்தோக்யோபநிஷத்தில் ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருக்கும் பரம்பொருளான நாராயணனை வர்ணிக்கும்போது ''அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரை போன்ற இரண்டு கண்கள் உள'' என்று உபநிஷத் ஓதிற்று. இதிலிருந்து பரம்பொருளான திருமாலுக்குத் தாமரைக் கண்கள் இயற்கையாய் அமைந்தவை என்றும் 'தாமரைக் கண்ணன்' என்பது நித்தியமான வேதாந்தத்தாலேயே இடப்பெற்ற திருநாமம் என்றும் விளங்குகிறது. 'திருமாலிடமிருந்து சிவன் உண்டானான்' என்று நாராயணோபநிஷத் முதலான பல உபநிஷத்வாக்யங்கள் பறை சாற்றுகின்றன. சங்கநூல்களும் ''வேதங்கள் இப்படிக் கூறுகின்றன'' என்று முழங்குகின்றன. கண்ணைப்பிடுங்கி அர்ச்சனை செய்த கதையோ, சிவன் சுதர்சனத்தைத் திருமாலுக்கு அளித்த கதையோ, ச்ருதி, ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், ஸாத்விக புராணங்கள், ஆதிசங்கரர் முதலான யதாசார்யர்களின் பாஷ்யங்கள், காளிதாஸன் போன்ற சிவபக்தகவிகளின் காவ்யங்கள் முதலிய எதிலுமே காணப்படவில்லை திருமாலுக்கு இவை அனைத்திலும் முழங்கப்படும் முதன்மையைக் கண்டு கடும் கொதிப்புற்ற சில விஷ்ணு த்வேஷிகளால் புனையப் பெற்றவையே இத்தகைய கதைகள் என்று இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது ''தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்யஜஸ்ரமசுபாந ஆஸுரீஷ்வேவ யோநிஷு ।'' [கொடியவர்களும், மனிதர்களில் மிகத்தாழ்ந்தவர்களும், அமங்களமானவர்களுமான என்னுடைய த்வேஷிகளை நான் ஸம்ஸாரத்திலேயே அதிலும் அசுரப்பிறப்புகளிலேயே எப்போதும் பிறக்கச் செய்கிறேன்] என்று கீதையில் கண்ணன் இவர்களுக்குக் கிடைக்கும் பலனைக் கூறியிருக்கிறான். பாலுணர்வுப் பத்திரிகைகளை நடத்தி ஆஸுரப்ரக்ருதிகளை வளர்க்கும் பத்திரிகையாளர்கள் மதப்பத்திரிகையின் மூலமும் ஆஸுரப்ரக்ருதிகளையே வளர்க்கிறார்கள் என்று விளங்குகிறது.

# ஸ்ரீ வாதி பீகர பரிணயம்

(முகவுரை)

எம்பெருமானுடைய இந்த லீலாவிபூதியானது ஒரு பூந்தோட்டம். இதிலே எத்தனையோ மலர்கள் மலர்ந்து மணம் வீசி மறைந்ததுண்டு. ஆனால் காலக் கனலில் கருகாக் கடிமலர்கள் சிலவே. அவற்றுள் ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி போன்ற பல விருதுகளாம் இதழ்களைப் பெற்ற ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி என்னும் நறுமலர் என்றும் நம் சென்னிப் பூவாகும். இப் பூவினைப் (பூ-பூமியை) பிரிந்த (அல்லது சீர்கலந்த சொல்லா

## தி. அ. அனந்தாழ்வான்

லும் எழுத்தாலும் பார்புகழும் செய்கைகளாலும் என்றும் பிரியாது சுடர்விடுகின்ற) அப்பூ (பூ-மலராகிய ஸ்ரீ ஸ்வாமி) அடியவர்களின் பூசைக்கு உரியதாகின்றது. பெரியோர்கள் தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிக்கும் அப்புண்ணியரைச் சிறிய ஞானத்தனாகிய எளியேனும் அவர் தம் பேரருளே துணையாக ஈண்டு அநுபவிக்க ஒருப்படுகின்றேன். ஸ்ரீஸ்வாமியின வைபவத்தை ஸங்கீத உபந்யாஸம் என்னும் ப்ரக்ரியையில் பலவிடங்களில் விண்ணப்பித்து வருகிறேன். 'ஸ்ரீ கீதாசார்யன்' பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் உ, வே M.A. வேங்கடகிருஷ்ணமாசார்யஸ்வாமி நியமனத்தால் அவ்வைபவத்தை எழுத்தில் வடித்துத் தர ஸ்ரீவேங்கடக்ருஷ்ணன் திருவருள் புரிவானாக!

இவ்வைபவத்தை அடியேன் முதன் முதல் விண்ணப்பித்த போழ்து கடாக்ஷித்தருளி (வடமொழிச் செய்யுட்களில்) அவசியமான சில திருத்தங்களும் செய்து கொடுத்

தருளிய ந்யாய வேதாந்த வித்வச்சிரோமணியான இரு மொழிக் கொண்டால் ஸ்ரீமதுயவே திருமலை அனந்தான் பிள்ளை க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி திறத்துத் தலையல்லாற் கைம்மாறிலேனே.

அடியேன் ஸ்வாபாவிகாஜ்ஞாநவசாத் இப்பணியில் பல பிழைகளை இடம்பெறச் செய்திருக்கலாம். அவற்றைப் பெரியோர்கள் தமது இயற்கையின்னருளால் பொறுத்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

“யத்ர யத்ர வரயோகி கீர்த்தநம்
தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரிபூர்ண லோசநம்
ஸ்வாமிநம் நமத வாதிபீகரம்”

திருமகள் கொழுநனான எம்பெருமான் பரமபதத்தில் ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கிறான். அதுதான் எவ்வண்ணம் என்னில் :-

(தோடிராகத்திலமைந்தத் ‘கொலுவமரெகத’ என்ற ஸ்ரீ த்யாகராஜஸ்வாமி கீர்த்தனையின் மெட்டு)

கொலுவமர்ந்தானே... நம்
பரமபத நாதன்... (கொலு)
நலமிகு நாரணன் நாயகன் ஸ்ரீதரன்
வலமிகு வானவர் வாழ்த்தொலி மலிய (கொலு)

சிறைப் பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணி கேட்க எம்பெருமான் இனிது வீற்றிருக்கும் போது “பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர்” என்கிற கணக்கிலே ஏத்தி னின்றனர் அடியவர்கள். அதுதான் எப்படி என்றால்:—

ராகம் : கரஹர ப்ரியா தாளம் : ரூபகம்

(''ராம நீ ஸமான மெவரு'' மெட்டு)

தேவ நீ ஸமான மெவரு
திவ்ய ரூப வப்ரமேய (தேவ)

பாவஜ்ஞ விநுத! ஸ்ரீத!
மாவர! ஸுகுணாகர! (தேவ)

அங்கு போயுமா நாம் ஸ்தோத்ரம் செய்ய வேண்டும்? இவ்வுலகில் தான் உண்டியே உடையே மற்றுள்ளனவே உகந்தோடி 'மாரியனேயுகை மாள்வரை யொக்கும் திண் டோள்' என்று மனிசரைப் பாட வேண்டியுள்ளது! அங்குப் போயும் ஏத்துவதாவதென்ன? ஏத்திப் பெறுவதாவ தென்ன? என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் விழு கிறது. ''தத் விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸம் ஸமிந்ததே'' என்கிறது சுருதி. இதைக் கருதி அமைதி பெறுக என்று ஆக்ஷேபிப்பார் ஒவ்வொருவரிடமும் சொல்லிவிட்டு மேலே தொடர்கிறேன். நித்யர்கள் மேலும் பரமபத நாதனை ஏத்துவர்:-

''விஷ்ணோ! ஸர்வாதிகச் சாலி
விபூதி த்வய நாயக!''

என்று அவர்கள் ஏத்துகையில் திருவோலக்கத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. எப்படிப் பரமபத நாதனை ஸர்வாதி கன் (யாவரினும் மேம்பட்டவன்) என்று சொல்லலாம்? என்று. முக்தர் சிலர் எழுந்திருந்து சொல்லலுற்றனர்.

''காஞ்ச்யாம் தேதீப்யதே தேவ:
சங்க சக்ர கதாதர:

மாஹாத்ம்யம் தஸ்ய கோவக்தும்

ஸமர்த்தோஸ்மாஸ் தத்வத :

(காஞ்சி நன்னகரில் பெருமாள் ஒருவர் மிக விளங்குகிறார். அவர் சுடராழி சங்கிருபால் பொலிய நிற்பவர். அவர் பெருமை கூறல் அரிது என்றபடி. எனவே பரமபத நாதனைக் காட்டிலும் தேவப்பெருமாள் சிறந்தவர். அப்படியிருக்க ஸர்வாதிகன் என்று பரமபத நாதனைச் சொல்லுதல் தகுதியன்று என்று கருத்து.) இதனைக் கேட்ட மற்றவர்கள் பரமபத நாதனைக் காட்டிலும் தேவாதி ராஜன் எவ்விதத்தில் உயர்ந்தவன் என்று மறுபடியும் வினவலுற்ற போழ்து முக்தர்கள் உரைப்பதாவது

''புரா பத்மபுவா தேவம்
ப்ரத்யக்ஷீக்ருதம் அத்புதம்
நந்தயத் யச்யுதம் நித்யம்
ப்ரதிவாதி பயங்கர:''

(முற்காலத்தில் மலரவனால் காணப்பட்ட அந்த எம்பெருமான் இன்றுமறையவருட் சிறந்தவரான ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் திருவுள்ள முவக்கப் பெறுகிறார் என்றவாறு)

இதைக் கேட்ட நித்யர்கள் அப்படியாயின் அண்ணங்கராசார்யரென்னும் அந்த ஸ்வாமிக்கு என்னஏற்றம் உள்ளதென்று கேட்க, முக்தர்கள் எம்பெருமான் திருவுள்ளம் குளிருமாறு ஸ்ரீ ஸ்வாமியின் பெருமைகளைக் கூறுகின்றார்கள்.

(தொடரும்)

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

ஆத்மா நித்யவஸ்து—எப்போதுமுள்ளது. ஆத்மாக்கள் எண்ணற்றவை அநந்தம். தூயநிலையில் எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரி இருக்கும். இதனால் ஒன்று எனமுடியாது. நிஜவழக்கில் ஆத்மாக்கள் வேறுபட்டுக் காண்கின்றன. ஸம்ஸாரத்தில் கட்டுண்டு நிற்கும் நம்போலியர் பத்தர்; எம்பெருமானருளால் இக்கட்டிலிருந்து விடுபட்டு மோக்ஷமடைந்து பரமபதம் சேர்ந்தவர் முக்தர். எந்நாளிலும் இந்த பிறவிச்சுழலிலகப்படாமலுள்ளவர் நித்யர். திருவநந்தாழ்வான், சேனைநாதன், பெரியதிருவடி, சக்கரத்தாழ்வான் போல்வார் என்றும் விண்ணாட்டில் எம்பெருமானுக்கடிமை செய்யும் நித்யர்கள். பிராட்டிமாரும் நித்யர்களே. முக்தாத்மாக்களையும் இருவகைப் படுத்திக்காணலாம். விண்ணாட்டில் எம்பெருமானைக் கிட்டி கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தைப் பெற்றவர் ஒருவகையினர். அதில் ஆசையின்றி அங்கேயே தூயநிலையில் தம்மைத்தாமே சுவைத்து இன்புறுமவர் மற்றொரு வகையினர். இவர்களைக் கேவலர் என்பர். இந்நிலைமை மோக்ஷத்திலேயும் இறப்பு என்று இகழ்வர் நமதாசாரியர்கள்.

இயற்கையில் குளிர்ந்துள்ள ஜலத்தை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின்மேலேற்றினால் அந்த ஸம்பந்தத்தாலே சூடாக ஆவது போல, அசித்ஸம்பந்தத்தினால் ஞானஸ்வரூபனான ஆத்மாவுக்கு அவித்யை (அறிவின்மை, மாறுபாடான அறிவு முதலான குற்றங்கள்) நல்லவை (புண்ணியம்) தீயவை (பாபம்) ஆன கர்மங்கள் (செயல்கள்), அச்செயல்களை மேலே செய்யத்தூண்டுமதான வாஸனை

அவற்றினின்றும் மீட்கவொண்ணுத ருசி இவற்றின் சேர்க்கை யுண்டாகிறது. அசித்ஸம்பந்தமாவது சரீரத் துடன் தொடர்பு; இவ்வுலகிற்பிறவி. இப்படி வந்தேறும் ... முதலான தோஷங்கள் பிறவிதோறும் ஆழ ... வந்து கொண்டேயிருக்கும். பிறவியை கொடிய

ஒவ்வொ... ன்கின்றனர் பெரியார். பிறவியெனப்படும் என்ற ஐம்... பந்தம் முழுதாக அற்றால்தான் அசித்ஸம்பந்தத் சொல்லுகி... ஆத்மா விடுபடுகிறுன். அந்த நிலையில் அவித்யாதி (இவனுக்கு... ள் தூளியுமில்லாமல் விலகிவிடும். இதுவே முக்த ...ன்னை ...ந நிலையில் ஆத்மாவின் ஞானம் (அறிவு) எவ்வித அனுப... ஸங்கோசமுமின்றி (சுருக்கமில்லாமல்) எங்கும் பரந்து தெரிய... ாய்) நிற்கும்.

...காணு...

...நா... முன் சொன்ன பத்த, முக்த, நித்யரான மூன்றுவகை ...ள்ள சேதனர்கள் தனித்தனியே எண்ணிறந்தவராக ...ிருப்பர். ஒரே மாதிரியுள்ளவைகளை "ஒன்று" என்று வழக்கில் சொல்வதுண்டு. எல்லாம் 'ஒரே நெல்' என்று தானிய வகையையிட்டுச் சொல்வதுண்டு; ஆனால் எண்ணிக் ...கையில் ஒன்ருகாது. ஒரே மாதிரியாயுள்ள ஆத்மாக்களை ...ன்று என்பது ஏலாது. ஒன்று என்று சிலர் சொல்வது ...று. அநுபவத்தில் ஒருவன் இன்புறுவதையும் அதே ...யத்தில் மற்ருருவன் துன்புறுவதையும் காண்கிருேம். ஆத்மா ஒன்றேயாகில் இது எப்படி ஸாத்தியமாகும்? ஆத்மா ஒன்றேயாகில் சிலர் ஸம்ஸாரத்தில் உழலுகையும் சிலர் விடுபட்டு முக்தியடைவதும் கூடாது. முக்கியமாக, "ஆத்மா ஒன்றே" என்னும் "நித்யோ நித்யாநாம் சேதநச் சேதநாநாம் ஏகோ பஹூநாம் விததாதி காமாந்" என்ற ச்ருதி வாக்கியத்தில் பஹூநாம் (பலவற்றுள்) என்று ஸ்பஷ்டமாக பன்மை சொல்லப்பட்டமைக்கு விருத்தமாகும். பரம பதத்திலும் ஸதாபச்யந்தி ஸூரய: என்று ச்ருதி பன்மை யிலேயே சொல்லிற்ருகையால் மோக்ஷதசையிலும் ஆத்ம பேத முண்டென்பது தெளிவாகிறது.

ஜீவாத்மாவுக்கு முக்கியமான ல
யத்துடன் (சேஷத்வத்துடன்) கூடிய
(அறிவாளியாயுள்ளமை). இப்படி குணமா
நித்யமாய், த்ரவ்யமாய் (substance), அ
வுக்குத்தானே விளங்குவதாய்) ஆநந்
ஆத்மா ஞானஸ்வரூபன் (ஞானமேவடிவா வ
ஞானகுணகன் (ஞானத்தையுடையவன்) என்று
அறிந்துள்ளோம். தர்மமென்னும் குணத்தை
தர்மி யாவான். ஆத்மா அணுவாகையாலே ஸ்
ஞானம் (தர்மி) சுருங்கவோ விரிவடையவோ
ஆகையாலே தனக்குத்தானே விளங்குவதொழு
யொழிந்தவற்றை ப்ரகாசப்படுத்தாது. இப்படித்
தானே விளங்கக்கூடியதை அஜடம் என்பர்.

இனி, ஞானமுடையவன் என்கையில், ஸ்வ
ஞானத்தினின்றும் வேறுபட்டு, குணமாக (தர்மமா
ஞானம் சுருங்கவும் விரியவும் கூடியது. இந்த
தர்மபூத ஞானம் என்பர். இது தனக்குத்தானே
தாகிலும் ஆத்மாவுக்குக் குணமாகையால் அது
கும். உலகிலுள்ள மற்ற விஷயங்களை ஆத்மாவிற்
பண்ணும். இக்காரணங்களாலே இதை அஜட
மற்ற விஷயங்களை ஆத்மாவுக்கு விளங்கப்பண்ணு மெல
யாலே இந்த ஞானம் விரிவடைந்து எங்கும் பரவக்கூடிய
ஆற்றலுடையது என்பது விளங்கும். எங்கும் பரவக்கூடியது
விபுவாகும். ஜீவாத்மா ஸ்வரூபத: அணுவாகையாலே விபு
வன்று. ஆனால் தனது தர்மபூத ஞானத்தின் மூலம் விபு
வாயிருக்க இடமுண்டு.

எல்லா ஆத்மாக்களின் ஜ்ஞானமும் எல்லாவிடங்
களிலும் பரந்திருக்கும் (விபுவாயிருக்கும்) என்று கொள்ள
முடியாது. ''அயர்வறுமமரர்கள்'' எனப்பட்ட நித்யஸூரி

ாக்காலத்திலும் துளியும் சுருக்கமில்லா
து விபுவாயிருக்கும். "பொய் நின்ற
ல்லாவொழுக்குமழுக்குடம்பும்" ஆகவுள்ள
ஸாரிகளின் ஜ்ஞானம் நமது வினைப்பயனுக்
டையக் கூடியது; விபுவாகாது. எம்பெரு
றவிக்கடலைக் கடந்து "கரை கண்டோர்"
முக்தரானவரின் ஜ்ஞானம் எல்லாதோஷமும்
பற்று விபுவாகி எங்கும் பரந்து நிற்கும் இந்
ர்வம் ஹ பச்ய: பச்யதி என்று ச்ருதி சொல்லும்.

மா நித்யமாயுள்ளதுபோல அதன் ஜ்ஞானமும்
யிருக்கும். ஆத்மா பத்ததசையிலுள்ளபோது அதன்
மானது இந்திரியங்களின் மூலம் வெளிப்பட்டு பல
களையும் அறிந்து மீளும். அறிந்த விஷயங்களைப்
அறிவு எப்போதும் அவ்வளவிலேயே இருக்குமென்று
முடியாது. இதனால் "ஜ்ஞானம் பிறந்தது,
' என்று சொல்லும்படியாயிருக்கும். மேலும்
ாண்கை, உணர்கை என்கிறபடி பலபடியாகவும்

•

த ஜ்ஞானம் அஜடமும் ஆநந்தரூபமாயுள்ள திரவிய
ருக்கும் என்பது நமதாசாரியர்களின் கொள்கை.
வற்றுள் ஆநந்தரூபமாவது—தன்னுடைய இருப்பிடமான
ஆத்மாவுக்கு எல்லாப் பொருள்களையும் அநுகூலமாகவே
காட்டுகை துக்கம் விளைவிக்கக்கூடிய விஷம், உடலில் காயம்
விளைவித்து அதனால் துக்கம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள்
இவை போன்றவை எப்படி அநுகூலமாகத் தோற்றும்?
என்னில்; இவை யாவுமே எம்பெருமானின் சரீரம் என்ற
உண்மை நன்ஞானமுள்ளவனுக்கு எதுவுமே அநுகூல
மில்லாததாகத் தோற்றாது. துக்கரூபமாய்த் தோற்றுவது
அவித்யாதிகளால் வந்த கலக்கம்; இயற்கையன்று.

(தொடரும்

ஸ்ரீ

ஸ்ரீ காஞ்சி மகா வித்வான் மஹாமஹ

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்

பரம பதித்தமை ஆற்ருது எழுந்

# இரங்கற்பா

முத்திதரும் தலங்களிலே முதன்மையதாம் காஞ்சி
மூதூரில் வந்துதித்த முகில் வண்ணன் பதமே
நித்தமுமே தொழுதேத்தி நிலவுலக குருவாய்
நிலவி நின்ற அண்ணு! நீர் எமையெங்ஙன் நீத்தா

மயர்வில்லா மதிநலமே பெறுமடியார் அருளும்
மாண்புமிகு தமிழ் மறையின் மறைபொருளை எல்லாம்
அயர்வின்றி நீரருளும் உரைமூலம் தெளியும்
அரும்பாக்கியத்தை யினி ஆரிடத்தே காண்பேர்.

ருப

ாக) வ

ஞா

ட்

தத்துவங்கள் மூன்றினையும் தான் விளக்கி ஆன்மா
தனியொன்றே எனப்பிதற்றும் தருக்கினர் தம்வாச
செத்தொழிய இறைநிலையைச் 'சிதி'ததனின் நிலையைத
தெளிவாக்கும் செம்மொழியை எங்குசெவி மடுப்போ

செத்தமிழர் தெலுங்கரொடு இந்திமொழி யொன்றே
தெரிந்தவரும் திருமாலின் சீர்த்திகளைத் தெளிய
அந்தமிகு உரைநடையில் எழுதியறி வுறுத்தும்
அக்கரங்கள் எங்ஙன் அசை வொழிந்தனவே அறையாய்.

வருத்தமுறும் உடல்நிலையில் எழுத்தேன்என் றேனே
எரித்துவிழித் தென்னசொனுய்? மழிசை யென்ன சொன்ஞர்
'தெரித்தெழுதி' என்றலவா? என் கை செயலறுங்கால்
சென்றிடுமென் உயிரென்றீர் செய்தேகாட் டிட்டீர்.

ன்றுடைய நூல்களையும் புகழ்ந்து
ண் என்னையுமோர் பொருளாக்கி நிறுத்தி
பலகூறி நாயேனைத் இருத்தும்
ற்கோர் கைம்மாறு நானெங்கே கண்டேன்

பத் த இகழ்வதென்றே வரிந்துகட்டி நிற்போர்
ாயடைத்து நிற்றவைக்கும் வாதம் வரைந்திடும்
ணத்தைக் களிப்புடன்காண் கார்மேனிக் கண்ணன்
கைகொடுத்தே உமையங்கே கட்டியணைத்தவின்றே.

ணங்க ராரியநீர் அந்தமில் வீடுறினும்
அழகுறச் றாறுபுண்ட்ரம் அணிந்தொளிர் நும்உருவம்
ண்ணுள்ளும் மனத்துள்ளும் காலமெலாம் நின்றே
கடைத்தேற்றி நிற்குமென்ற கருத்தெம்மைக் காக்கும்.

வரதனொடு பெருந்தேவி முழங்டுநும் குரலில்
வண்டமிழ்மா மறைகேட்க வாய்ப்பின்றி விடினும்
மவர் திருநாட்டை அலங்கரிக்கும் நுந்தம்
ந்தஇயல் சாத்தினையே செவிமடுத்துத் தளிர்ப்பார்.

வாழி தமிழ்மறைகள் வாழிஉரை ஆசிரியர்
வாழி மறைமுழங்கும் வைணவர்கள்—வாழியரோ
எந்தை உலகாசான் அண்ணங்க ரர்நாமம்
சந்ததமும் நாட்டில் தழைத்து.

வைநதேய ராமாநுஜ தாஸன்
(K. பக்ஷிராஜன்)

# திருக்கூ

கூடலூர்:- கூடல் என்றதும்
நினைவில் தோன்றும். தென் மதுரை
என்று பெயர். அதனைக் 'கூடல்' எ
மதுரை பாண்டிய நாட்டில் உள்ளது.
என்ற இத்திவ்யதேசம் சோழ நாட்டில் உ
'ஆடுதுறைப் பெருமாள் கோயில்' என்றும்
காவிரிக்கரையில் உள்ள சிறிய கோயில் இது.
திலுள்ள இச்சிறிய கோயிலில் எழுந்த
எம்பெருமான் ஜகத் ரக்ஷகன், வையம் காத்த பெ
என்று இவரைக் கூறுவர். மிகப் பெரிய பதவியி
வர்கள் ஆடம்பரமின்றிச் சிறிய வீட்டியேயே வ

## ஸ்தலசயனத்துறைவர்

வந்தார்கள். முற்காலத்தில் எல்லா உலகங்களையும் கா
வல்லவனாக இருந்தும் 'ஜகத் ரக்ஷகன்' சிறிதும் ஆட
மின்றி இக்கூடலூர் ஸன்னதியில் எழுந்தருளி இ
மிகவும் வியப்பிற்கு உரியதாகும். தேவர்கள் கூட்டம்
மாக வந்து இந்த எம்பெருமானை வணங்கி வாழ்த்தி
பெற்றுச் செல்வார்களாம். அதனால் இவ்வூருக்கே கூ
என்று பெயர் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.
லுள்ள தேவர்கள் வருகிறபடியால்தான் நிலத்தேவ
ஒரு ஸ்ரீவைஷ்ணவரையும் இவ்வூரில் காணமுடியவில்
என்று நம் உள்ளம் நம்மையே கேட்கிறது! ஆனால் இவ்வூரி
லுள்ள மக்கள் அனைவரும் இந்த எம்பெருமானிடம் மிக்க
பக்தி கொண்டிருக்கிறார்கள். ஸன்னிதியில் மங்கள காரி
யங்கள் பலவற்றை நடத்துகிறார்கள். பல்லாண்டு பாடு
வதற்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவரும் இல்லாத இந்தத் திவ்ய
தேசத்தைத் தென்னாசார்ய திவ்யதேசமாகவே இன்றளவும்
காப்பாற்றிவரும் இவ்வூரிலுள்ள மக்களை நாம் மனம்

...ழ்ந்தே தீரவேண்டும். இவ்வாறு
...னின் திருவுள்ளத்தையும் உகப்பிக்கும்
...லை

...ன்ற தூயவன்:- தூது செல்லுதல் என்பது ஒரு
...சன் அரசனுக்குத் தூது விடுதல். தலைவன் தலை
...அனுப்பு...ல் ஆகியவற்றை இலக்கியங்களிலும்
...ங்களிலும் காணலாம், இராமன் சீதையிடம்
...புலை... தூது அனுப்பினான். பாண்டவர்கள் கௌரவர்
...றபடி ...
...5) ...ண்ணனைத் தூது அனுப்பினார்கள், ஆழ்வார்கள்
...ளிடம் பறவைகளைத் தூது அனுப்பினார்கள் ஒரு
...க்ஷன் தன் மனைவியிடம் மேகத்தை தூது அனுப்பிய
...சய்தியை காளிதாஸன் இயற்றிய 'மேக தூதம்' என்னும்
...ால் கூறுகிறது. தூதனாகச் செல்பவனுக்குத் தனித்திறமை
...துவும் தேவை இல்லை. தலைவன் சொல்லி அனுப்பிய
...ய்தியை அப்படியே சொன்னால் போதும்!

...ண்டவர்கள் கண்ணனைத் தூது செல்லுமாறு வேண்
...ர். எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடியே தானாகத்
...த இவ்வாய்ப்பை கண்ணன், நழுவவிடவில்லை;
...டவர்களின் வேண்டுகோளுக்கு உடனே இசைந்தான.
...ாதனனிடம் சென்று என்ன சொல்ல வேண்டும்?
...பாண்டவர்களை ஒவ்வொருவராகக் கேட்கிறான்;
...களின் எண்ணங்களை அறிகிறான். தருமபுத்திரர்
சொல்லியனுப்பியதை அப்படியே சொல்லுகிறான்.
கண்ணன் முற்றும் உணர்ந்த ஞான உருவாக இருந்தும்
தூதனின் இலக்கணத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்
கிறான். 'பாண்டவதூதன்' என்ற பெயரை சம்பாதித்துக்
கொள்கிறான்.

மேன்மையை விளக்கிக் கொண்டு எப்போதும் நின்று
கொண்டிருப்பது தனக்குப் பெருமையன்று என்று பகவான்

நினைக்கிறான். உண்மையான
யார்கள்! அடியார்கள் கட்டளை
டளையை ஏற்று நடந்து தன்
காட்ட வேண்டும் என்பதே அவனது
தூது செல்லும் தாழ் செயலைச் செய்தாலு
யும் விட உயர்ந்தவனாகிய எம்பெருமான்
செய்தானே!' என்று அறிஞர்கள் பக
மனத்தைப் பறி கொடுக்கிறார்கள். பாண
சென்றதால் அயர்வறும் அமரர்கள் அ
தன்மை மேலும் விளங்குகிறது. பிறர்க்கு
பவனே உலகில் உயர்வு பெறுகிறான் என்ப
துணிவு அதனைச் செயல் முறையில் காட்டியவன் எ
மான், தூது வேந்தர்க்காய வேந்தர்' என்கிறார் ஆ
திருமங்கையாழ்வார் கூடலூர் எம்பெருமானை ஸேவிக்
பரத்வம் விளங்கும்படி அவன் எழுந்தருளி இருப்ப
கண்டார் அவ்வூரில் வாழும் பெண்களின கூந்தல்
எம்பெருமானின் கல்யாண குணங்களின் மணம்பர
கலந்து கமழ்வதை அறிந்தார். பரம ரசிகருப்ப
எம்பெருமானுக்கு இவ்வளவு பெருமை எப்ப
வந்தது? என்று வியப்புடன் சிந்திக்கிறார். இப்
யாராலும் வந்து விடவில்லை; தானே ஸ
கொண்ட பெருமைதான்! ஆனால் இவன
இவனுக்கே தெரியாது! இவனே தூது செல்
என்பதை உணர்த்துகிறார்.

பாசுரம்

தாம தம் பெருமையறியார் தூது
வேந்தர்க்காய வேந்தரூர் போல்
காந்தள் விரல் மென்கலை நன்னுடையார்
கூந்தல் கமழும் கூடலூரே!

பெரிய திருமொழி 5, 2, 1

அடியேனைக் கை விடலாமோ? எம்பெருமானே! நீ
பற்றுடை அடியவர்க்கு எளியன்; அவர்களிடம் பேரன்பு

துன்பத்தை உன் துன்ப
ர்களுடைய பகையை 'அழித்து
ற்ற முடையவன்! அதற்காக
செய்யவும் தயாராக இருப்பவன்;
இல்லாவிடில் 'அடியார்க்கு என் செய்வ
நீ!' என்று ஆழ்வார்கள் உன் குணத்தில்
களா?

ருக்கும் 'செவி வாய் கண் மூக்கு உடல்.
ர்களையும் கொடுத்தாய். இந்த ஜீவாத்மா
எல்லாம் கேட்டு அடங்கி நடந்துகொண்டு
வி செய்து துணையாக இருங்கள்; முடிவில்
அடைவதற்கு வழிகாட்டுங்கள்' என்று கட்டளையிட்டு
னாய்! ஆனால், இன்று என்ன நடைபெறுகிறது
மா? என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்
வே' என்ற நிலையைத் திருப்பாணாழ்வாருக்குக்
த்தாயே! என்னுடைய கண்கள் சிற்றின்பமளிக்கும்
கத் தேடுகிறதே தவிர, பேரின்பமயமான உன்னைக்
வும் மறுக்கிறதே! என் செவிகள் மயக்கும் வார்த்தை
இழிசொற்களையும் கேட்க ஓடுகின்றனவே
ங்களைக் கேட்கவும் துணியவில்லையே!
மூக்கோ உனது புஷ்பங்கள் திருத்துழாய்
றின் திவ்ய பரிமளத்தின் வாசனையை அறிந்ததும்
வாயோ, சோறு கூறைக்காக மன்னுதை
வாழ்த்துகிறதேயொழிய, உன் திருநாமங்களை
(பெ களைச்) சொல்லிப்போற்றி உனக்குப் பல்லாண்டு
பாடவும் இசையவில்லையே! உன் ஸன்னிதிக்கு வருதல்'
உன்னைவலம் வந்து ஸேவித்தல், உனக்குச் சிறிது நேரமே
னும் தொண்டு செய்தல் ஆகியவற்றில் எதற்குமே என்
உடல் இசையமாட்டேன் என்கிறதே! 'நல்ல நண்பர்களை
எனக்குக் கொடுத்தாய்! நான் அவற்றை அடக்கியாள்வேன்
என்று நினைத்தாயோ!

(தொடர்ச்சி 40ம் பக்கம்)

450 ஸத்ரம் - பல யஜமானர்களால் நீண்ட கால செய்யப் படும் ஸத்ரமென்கிற யாக விசேஷத்தினுல் ஆராதிக்கப்படுபவர்.

451 ஸதாம்கதி :- ஸத்துக்களுக்குப் புகலிடமாக வுள்ளவர்

452 ஸர்வதர்சீ - எல்லாவற்றையும் கட்கூடாகக் காண வல்லவர்.

453 நிவ்ருத்தாத்மா - (விமுக்தாத்மா என்பதும் பாடம்) சப்தாதி விஷயங்களை மனத்தினுல் துறந்திருப்பவர்

454 ஸர்வஜ்ஞ :- தம்மை ஸர்வாந்தர்யாமியாக அறிந்திருப் பவர்.

455 ஜ்ஞாநம் உத்தமம் - (உத்தமம் ஜ்ஞாநம்) எல்லாவற்றி னுஞ் சிறந்த வைஷ்ணவ தருமத்தை யாவரும் தெரிந்துகொள்ளக் காரணமாக இருப்பவர்.

456 ஸுவ்ரத :- சிறந்த விரதத்தை ஏற்றுக்கொண்டிருப் பவர்.

457 ஸுமுக :- மநோஹரமான திருமுகமண்டலத்தை யுடையவர்.

458 ஸூக்ஷ்ம :- தியானத்தினுல் மட்டும் புலப்படக் கூடிய மிக நுட்பமான ஸ்வரூபமுடையவர்.

459 ஸுகோஷ :- அலையாருங் கடல்போல் முழங்கும் முது நான் மறைகளினுல் கோஷிக்கப்படுகிறவர்.

460 ஸுகத :- பரமஸுகமாகிய பலனை அளிப்பவர்.

461 ஸுஹ்ருத் - எவர் விஷயத்திலும் நன்மையையே கருதும் சிறந்த மனமுள்ளவர்.

462 மநோஹர :- பக்தர்களின் மனங்களைக் கவருகின்றவர்.

463 ஜிதக்ரோத :-அடியார்கக்குக் காமக்ரோதங்கள் முதலியவற்றைப் போக்குபவர்.

464 வீரபாஹு :-வீரத்தன்மை வாய்ந்த திருத்தோள்களை யுடையவர்.

465 விதாரண :-ஆஸுர ப்ரக்ருதிகளைச் சேதிப்பவர்.

466 ஸ்வாபந :-அழகிய புன்சிரிப்பு இனிய நோக்கு முதலிய வற்றால் அன்பர்களை அயரும்படி செய்வர்.

467 ஸ்வவச :-தம் இஷ்டப்படி மகிழ்ந்திருப்பவர்.

468 வ்யாபீ – எல்லாரிடத்திலும் வியாபித்திருப்பவர்.

469 நைகாத்மா பலவுருவங்களெடுத்தவர்.

470 நைககர்மக்ருத் - பல செய்கைகளை செய்பவர்.

471 வத்ஸர :- விலக்ஷணரூபத்துடன் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாக வஸிப்பவர்.

472 வத்ஸல :-அடியார்களிடத்தில் பேரன்பு பூண்டிருப் பவர்.

473 வத்ஸீ - ஆத்மவர்க்கங்களை மிகுதியாக யுடையவர்.

474 ரத்நகர்ப்ப :-அடியார்களுக்கு அளிக்கவேண்டி மிகுந்த தனங்களைத் தம்மிடம் வைத்திருப்பவர்.

475 தநேச்வர :-அவரவர்கள் விரும்பின ஐச்வரியங்களை உடனேயளிப்பவர்.

476 தர்மகுப் - தர்மத்தைக் காப்பவர்.

477 தர்மக்ருத் - எல்லாரையும் தர்மிஷ்டர்களாகச் செய் பவர்.

478 தர்மீ - எல்லாவற்றையும் காப்பாற்றுவதற்கு தருமத் தையே பொதுவான கருவியாகக் கொண்டிருப் பவர்.

479 ‡ ஸத் - "உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென்று முளன் கண்டாய்" என்கிறபடியே எப்போதும் உளனுயிருப்பவர்.

480 அக்ஷரம்ஸத் -எக்காலத்திலும் எத்தேசத்திலும் குணங்களும் ஸ்வரூபமும் குறைபடாதிருப்பவர்.

481 அஸத் - தீயவர்களுக்கு நீண்டகாலம் முடிவில்லாத ஸம்ஸார துக்கத்தைக் கொடுப்பதனுல் அநித்யமாகிய துக்க ரூபமாக இருப்பவர்.

482 அஸத்க்ஷரம் - தீயவர்களிடத்தில் நில்லாமல் செல்பவர்

483 அவிஜ்ஞாதா - அடியார்களது குற்றங்களையறியாதவர்.

484 ஸஹஸ்ராம்சு :-அளவற்ற ஞானங்களையுடையவர்.

485 விதாதா - அடியானுடைய குற்றங்களை க்ஷமிக்கும் போது பாவங்களுக்குப் பலன்களைத் தரத் தக்க யமனும் அவனுல் செய்யப்படும் வேதனைகளும் அவ்வடியானை யாதொன்றும் செய்யாதபடி தாமே நடத்துகிறவர்.

486 க்ருதலக்ஷண :- தாம் அநுக்ரஹிக்கத் தக்கவர்களுக்குத் தாமே அடையாளம் செய்திருப்பவர். [மித்ர பாவனையோடு வந்தாலும் கைவிடமாட்டேனென்கிற உறுதி இங்குக் கொள்ளத் தக்கது.]

---

‡ இவ்விடத்தில் "ஸதஸத் க்ஷரமக்ஷரம்" என்று சங்கர பாஷ்யப்படி மூலப்பாடம்; "ஸதக்ஷர மஸத்க்ஷரம்" என்று பட்டர் பாஷ்யப்படி மூலப்பாடம். 'ஸத்' என்பதைத் தனியே ஒரு நாமமாகவும் பிறகு அக்ஷரம் என்பதோடு கூட்டியும் பட்டர் பாஷ்யமருளிச் செய்துளர்.

487 கபஸ்திநேமி :- கிரணங்களால் ஒளிர்கின்ற ஆயிரம் முனைகளோடு கூடிய சக்கரத்தையுடையவர்.

488 ஸத்வஸ்த :- சரணாகதர்களுடைய உள்ளத்திலுறைபவர்.

489 ஸிம்ஹ :- ஆச்ரிதர்கட்கு விரோதிகளாயுள்ளவர்களை ஹிம்சிப்பவர்.

490 பூதமஹேச்வர :- எல்லாப் பிராணிகளையும் நியமிக்கின்ற பிரமன் யமன் முதலானோர்க்கும் நியாமகர்.

491 ஆதிதேவ :- ஸகல தேவர்களுக்கும் மூத்தவராகி விளங்குபவர்,

492 மஹாதேவ :- மேற்பட்டவர்களான பிரமன் முதலானவர்களை வைத்துக்கொண்டு விளையாடுபவர்

493 தேவேச :- பிரமன் முதலிய தேவர்களை அவரவர்களுக்குரிய பதவிகளில் நியமிப்பவர்.

494 தேவப்ருத் :- தேவர்களுக்கு நிர்வாஹகர்.

495 குரு :- முதன்மையான ஆசாரியர்.

496 உத்தர :- பிரமன் முதலிய தேவர்களை ஆபத்துக்களில் நின்றும் கரையேற்றுபவர்.

497 கோபதி :- ஸகல வாக்குகளையும் நடத்துபவர்.

498 கோப்தா :- எல்லா வித்தைகளையும் காப்பாற்றுகிறவர்.

499 ஜ்ஞாநகம்ய :- ஞானத்தினால் அறியத்தகுந்தவர்.

500 புராதந :- அநாதிஸித்தர்.

501 சரீரபூதப்ருத் :- தமது சரீரமாகிய ஸகல பூதங்களையும் உயிராகத் தாங்கியிருக்குமவர்.

502 போக்தா :- ஹவ்ய கவ்யங்களெல்லவற்றையும் புஜிப்பவர்.

503 கபீந்த்ர :- ஸ்ரீ ராமாவதாரத்தில் வானரவுருக் கொண்ட தேவர்களுக்குத் தலைவராக இருந்தவர்.

504 பூரிதக்ஷிண :- தர்மஸ்தாபனத்திற்காக உலகில் பல யாகங்களை நடத்தி அவற்றில் அபரிமிதமான தக்ஷிணைகளைக் கொடுத்தவர்.

505 ஸோமப :- தாம் செய்த அந்த யாகங்களில் ஸோம ரஸத்தைப் பானம் பண்ணினவர்.

5 6 அம்ருதப :- அன்பர்களுக்குப் பரமபதத்தில் தம்மை யநுபவிப்பதாகிய அம்ருதம் என்கிற பரமானந் தத்தைக் காப்பாற்றுகிறவர்.

507 ஸோம :- தாமே அம்ருதமாக இருப்பவர்.

508 புருஜித்- அவதாரங்களில் பலரை வெல்பவர்.

509 புருஸத்தம :- தமது திருக்குணங்களை யநுபவிக்க விரும்பும் பலரிடத்தில் ஸ்திரமாக இருப்பவர்.

510 விநய :- ஆஸுரப்ரக்ருதிகளைத் தமது பராக்ரமத் தினால் தண்டித்து அடக்கினவர்.

511 ஜய :- ஆச்ரிதர்களால் வெல்லப்பட்டு அவர்களுக்குத் தோற்று ஏவல் தொழில் செய்பவர்.

512 ஸத்ய ஸந்த :- அடியார்களைக் காப்பாற்றும் விஷயத்தில் சொன்னசொல் தவறாதவர்.

513 தாசார்ஹ :- யாதவ குலத்தில் கண்ணனாகத் தோன் றினவர்.

514 ஸாத்வதாம்பதி :- பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைப் பிரவர்த்திப்பித்து ஸாத்வதர்களென்னும் பாகவ வதர்களைக் காப்பாற்றுபவர்.

515 ஜீவ :- பாஞ்சராத்ர விதிப்படி தம்மை ஆராதிப் பவர்களை உஜ்ஜீவிக்கச் செய்பவர்.

516 விநயிதா - பாகவதர்களை ராஜகுமாரர்களைப் போல ஆதரித்துக் காப்பாற்றுகிறவர்.

517 ஸாக்ஷீ - அந்த பாகவதர்களின் ஒழுக்கங்களை ப்ரத்யக்ஷ மாகப் பார்ப்பவர்.

518 முகுந்த :- முக்தியைக் கொடுப்பவர்.

519 அமிதவிக்ரம :- அளவற்ற பராக்ரம முடையவர்.

520 அம்போநிதி :- கடல் வடிவமாகவுள்ளவர்.

521 அநந்தாத்மா-ஆதிசேஷனுக்கு ஆத்மாவாக இருப்பவர்

522 மஹோததிசய :- பெருங்கடலில் பள்ளி கொள்பவர்

523 அந்தக :- பிரளய காலத்தில் எல்லாவற்றையுமழிப் பவர்.

524 அஜ :- அகாரத்தின் பொருளாகத் தோன்றியவர்,

525 மஹார்ஹ :- ஆராதனைக்கு உரியவர்.

526 ஸ்வபாவ்ய :- இயற்கையாகவே ஸ்வாமியாக அமைந் தவர்

527 ஜித அமித்ர :- பகைவர்களை வென்றவர்.

528 ப்ரமோதந :- தம்மைச் சிந்தனை செய்பவர்களை மகிழ் விப்பவர்—அவர்களது மகிழ்ச்சியைக் கண்டு தாம் மகிழ்பவர்.

529 ஆநந்த :- தைத்திரீய உபநிஷத்தில் ஆனந்த வல்லியிற் சொன்னபடி வாக்குக்கும் மனத்திற்குமெட்டாத பேரானந்தமுடையவர்.

530 நந்தந :- தம்முடைய ப்ரஹ்மானந்தத்தை மோக்ஷத் தில் அளிப்பவர்.

531 நந்த :- ஆனந்தத்திற்குரிய எல்லாப் பொருள்களும் தம்மிடம் நிரம்பியிருக்கப் பெற்றவர்.

532 ஸத்யதர்மா - தம்முடைய தருமமாகிய சரணாகதரக்ஷ ணத்தைத் தவறாது நடத்துபவர்.

533 த்ரிவிக்ரம :-மூன்று வேதங்களிலும் வியாபித்தவர்.

534 மஹர்ஷி :- வேதங்களையெல்லாம் நேராகக் கண்டறிந் தவர்.

535 கபிலாசார்ய:-கபிலர் என்கிற ஆசார்யராகத் தோன்றி யவர்.

536 க்ருதஜ்ஞ :- அபராதங்களைத் தவிர்த்து நல்வினைகளை மட்டுமே அறிபவர்.

537 மேதிநீபதி :- பூமிக்கு நாதர்.

538 த்ரிபத :-ப்ரணவத்திலுள்ள அகார உகார மகாரங் களாகிய மூன்று பதங்களாலும் சொல்லப்படுபவர்.

539 த்ரிதசாத்யக்ஷ :- பிரமன் முதலிய தேவர்களை காப்பாற்றின பிரபு.

540 மஹாச்ருங்க :- பூமண்டலமெல்லாம் முனையில் ஒட்டிக் கொண்டிருக்கும்படி பெரிதான கோரப்பல்லை யுடையவர்.

541 க்ருதாந்தக்ருத் - யமனைப் போன்ற ஹிரண்யாக்ஷ னெனும் கொடிய அசுரனை அழித்தவர்

542 மஹாவராஹ :- பூமியை யிடந்தெடுக்க ஒப்புயர்வற்ற வராஹரூபியானவர்.

543 கோவிந்த :- (மஹாவராஹ ரூபியாகி) பூமியைத் திரும்பவும் அடைந்தவர்.

544 ஸுஷேண :- அன்பர்களை வசப்படுத்துவதற்கு உரிய நல்ல கருவிகளை யுடையவர்.

545 கநகாங்கதீ - அப்ராக்ருதமான தோள்வளைகள் முதலிய திவ்விய பூஷணங்களை யெப்பொழுதும் அணிந்து கொண்டிருப்பவர்

546 குஹ்ய :- உபநிஷத்துக்களினால் மட்டும் அறியத்தக்கதும் வெளிப்படையாகப் புலப்படாததுமான திவ்விய மங்கள விக்ரஹத்தை யுடையவர்.

547 கபீர :- அகாதமான மகிமை வாய்ந்தவர்.

548 கஹந :- அளவற்றிருப்பதனால் கிரஹிக்கக் கூடாதவர்.

549 குப்த :- தம் மஹிமையையுணர்ந்த பூருவாசாரியர்களால் ரக்ஷிக்கப்பட்டவர்.

550 சக்ரகதாதர :- கதை சக்ரம் முதலிய திவ்யாயுதங்களை யுடையவர்.

551 வேதா :-அன்பர்களுக்கு மங்கலமான விபவங்களைச் செய்பவர்.

552 ஸ்வாங்க :- தமது ஸர்வேச்வர தன்மைக்கு அங்கமான குடை சாமரம் முதலிய பரிகரங்களை யுடையவர்.

553 அஜித :- 'அஜிதை' என்னும் ஸ்ரீ வைகுண்ட நகருக்கு அதிபதி.

554 க்ருஷ்ண :-கார்முகில்போன்ற கறுத்த நிறமுடையவர்

555 த்ருட :- பாஹ்யகுத்ருஷ்டிகளின் துர்வாதங்களினால் அசைக்க முடியாதபடி த்ருட ப்ரமாண ஸித்தர்.

556 ஸங்கர்ஷண :- சேதநாசேதநங்களைத் தம்மிடத்தில் ஒன்று சேரும்படி ஆகர்ஷிப்பவர்.

557 அச்யுத :-தம்முடைய பதவியிலிருந்து ஒரு காலும் நழுவாதவர்.

558 வருண :- எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டிருப்பவர்,

559 வாருண :- தம்மை ஸ்வாமியாக வரிக்கின்ற பக்தர் களிடமிருப்பவர்.

560 வ்ருக்ஷ :-நிழல்தரும் மரம்போல அன்பர்கள் வந்தடைவதற்கு ஆச்ரயமா யிருப்பவர்.

561 புஷ்கராக்ஷ :-கருணை பொழிந்து அன்பர்களைப் போஷிக்கும் திருக் கண்களை யுடையவர்.

562 மஹாமநா :-"உன்னடியார்க்கு என் செய்வனென்றே யிருத்தி நீ" என்கிறபடியே அன்பர்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்தும் த்ருப்தி பெறாத விசால மான மனமுள்ளவர்.

563 பகவாந் - கல்யாண குணங்களே நிரம்பியிருப்பவர்.

564 பகஹா - ஐச்வரியம் வீர்யம் கீர்த்தி லக்ஷ்மி ஞானம் வைராக்யம் என்கிற இவ்வாறு குணங்களை யும் அடைந்திருப்பவர்.

565 நந்தீ - நந்தகோபரைத் தந்தையாகப் பெற்றவர்.

566 வநமாலீ - வைஜயந்தி யென்னப்படும் வனமாலையை யணிந்திருப்பவர்.

567 ஹலாயுத :-பலராமாவதாரத்தில் கலப்பையை ஆயுத மாகக் கொண்டவர்.

568 ஆதித்ய :-முற்பிறப்பில் அதிதியாகவிருந்த தேவகியின் புதல்வர்.

569 ஜ்யோதிராதித்ய :-அப்ராக்ருதமாய் ஆச்சர்ய தேஜோ மயமான ஸூர்யன்.

570 ஸஹிஷ்ணு :-அடியார்களின் அபராதங்களைப் பொறுப் பவர்.

571 கதிஸத்தம :- தத்வங்களைச் செவ்வனே யுணர்ந்து. உணர்ந்தபடியுரைப்பவர்.

572 ஸுதந்வா - சிறந்தவில்லை ஏந்தியுள்ளவர்

573 கண்டபரசு :-பகைவரைக் கண்டிக்கவல்ல கோடாலிப் படையை யுடைவர்.

574 தாருண :-வெளிப்பகைவர்களையும் உட்பகைவர்களையும் சிதைப்பவர்.

575 த்ரவிணப்ரத :- வ்யாஸரூபியாய்க்கொண்டு சாஸ்த்ரார்த்தங்களாகிற தனங்களை நிரம்பக் கொடுப்பவர்.

576 திவிஸ்ப்ருக் - கட்புலனுக்கு எட்டாததையும் அறிய வல்ல ஞானப் பெருமையுடையவர்.

577 ஸர்வத்ருக் - எல்லாவற்றையுங் கண்டறிகிறவர்.

578 வ்யாஸ :- வேதங்களை வகுத்ததினால் வ்யாஸரென்று பேர்பெற்ற முனிவரை ஆவேசித்திருந்தவர்.

579 வாசஸ்பதி :- வ்யாஸரூபியாயிருந்து ஐந்தாவது வேதமான மஹாபாரத மென்னும் ஸரஸ்வதிக்கு ஸ்வாமியானவர்.

580 அயோநிஜ :- யோனிப் பிறப்பு இல்லாதவர்,

581 த்ரிஸாமா - தம்மைச் சொல்லுகிற ப்ருஹத் ரதந்திரம், வாமதேவ்யம் என மூன்றுவகைப்பட்ட ஸாமங்களினால் கானஞ் செய்யப்படுபவர்.

582 ஸாமக :- ப்ரஹ்மாநுபவ ஆனந்தத்தினால் அந்த ஸாமங்களைத் தாமும் பாடிக்கொண்டிருப்பவர்

583 ஸாம :- ஸாமவேத ஸ்வரூபியானவர்.

584 நிர்வாணம் - முக்தி ஸ்வரூபமாயிருப்பவர்.

585 பேஷஜம் - பிறவியெனும் பிணிக்கு மருந்தாயிருப்பவர்.

586 பிஷக் - ''மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா'' என்ற ; ஆழ்வாரருளிச் செயலின்படி பிறவி யென்னும் பிணிக்குப் பரிஹார முணர்ந்த வைத்யர்.

587 ஸந்ந்யாஸக்ருத் - பிறவிநோய் தீருவதற்குக் காரண மான ஸாத்விக த்யாகத்தைச் செய்விப்பவர்.

588 சம :-அடக்கவேண்டிய காமக்ரோதம் முதலியவற்றை அடக்குவதற்கு வழிகாட்டியவர்.

589 சாந்த :- அலையோய்ந்த கடல்போல சாந்தமூர்த்தி யாகவுள்ளார்.

590 நிஷ்டா - ஆதாரமாயிருப்பவர்.

591 சாந்தி :- எல்லாவற்றையும் மறந்து தம்மையே அநுப வித்துக் கொண்டிருக்கச் செய்பவர்.

592 பராயணம் - மோக்ஷத்திற்குச் சிறந்த வுபாயமான பரம பக்தியைத் தாமே அளிப்பவர். [பராயண: என்பதும் பாடம். சிறந்த ஸ்தானத்தை யுடையவர் என்று பொருள்.]

593 சுபாங்க :- யோகத்தின் அங்கங்களான யமம் நியமம் முதலானவற்றை நிறைவேற்றுகிறவர்.

594 சாந்தித :- தமது ஸாயுஜ்யமாகிய சாந்தி நிலையைக் கொடுப்பவர்.

595 ஸ்ரஷ்டா :- கரணகளேபர ப்ரதானஞ் செய்து படைப் பவர்.

596 குமுத :- இந்நில வுலகத்திலிலுள்ள சேதநர்களுக்கு வேண்டிய போகங்களை யளித்து மகிழ்ந்திருப்பவர்.

597 குவலேசய :- இந்நிலத்திலேயே பிறந்து மிறந்தும் உழன்று கொண்டிருக்கும் ஜீவராசிகளுக்கு அந்தர் யாமியாயிருந்து அவர்களை நடத்துபவர்.

598 கோஹித :- பூமிக்கு நன்மை செய்பவர்.

599 கோபதி :- யோக பூமியான சுவர்க்கத்திற்கும் ஸ்வாமி.

600 கோப்தா -இம்மையிலுள்ள கரும பலன்களனைத்தையும் ரக்ஷிப்பவர்.

601 வ்ருஷபாக்ஷ :- தருமத்தின் வழியாக கரும பலன்களை ரக்ஷிப்பவர்.

602 வ்ருஷப்ரிய :- தருமங்களில் அன்பு வைத்திருப்பவர்.

603 அநிவர்த்தீ - ப்ரவ்ருத்தி தர்ம நிஷ்டர்களை மீளவும் இவ்வுலகில் பிறப்பிப்பதனால் அவர்களை ஸம்ஸாரத்தை விட்டு நிவர்த்திக்கச் செய்யாதவர்.

604 நிவ்ருத்தாத்மா - நிவ்ருத்தி தர்மத்திலிருப்பவர்களுக்கும் ஈசுவரராயிருப்பவர்

605 ஸம்க்ஷேப்தா - ப்ரவ்ருத்தி தர்மத்திலிருப்பவர்களுக்கு அறிவும் மகிமையும் குறுகும்படி செய்பவர்.

606 க்ஷேமக்ருத் - நிவ்ருத்தி தர்ம நிஷ்டர்களுக்கு அறிவும் மகிமையும் சுருங்காமல் விரிவாகும்படி மோக்ஷமென்கிற க்ஷேமத்தை யளிப்பவர்.

607 சிவ:- நல்லோர்க்கு நன்மைகளைச் செய்பவர்.

608 ஸ்ரீவத்ஸவக்ஷா :- ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தைத் திருமார்பிலுடையவர்.

609 ஸ்ரீவாஸ :- ஸ்ரீ மஹாலக்ஷ்மி எப்போதும் தம்மிடத்தே வாஸஞ் செய்யப் பெற்றவர்.

610 ஸ்ரீபதி :- திருமாமகள் கொழுநன்

611 ஸ்ரீமதாம் வர :- செல்வச் சிறப்பு பொருந்தின பிரமன் முதலியோரெல்லாரினுஞ் சிறந்தவர்.

612 ஸ்ரீத :- பிராட்டிக்கு **ஸ்ரீ** யென்கிற பெயரையளித் தவர்.

613 ஸ்ரீச :- பிராட்டிக்கும் அவ்வளவு பெருமை வந்த தற்குக் காரணபூதர்.

614 ஸ்ரீநிவாஸ :- பிராட்டிக்கு எப்போதும் சேர்விடமாக வுள்ளவர்.

615 ஸ்ரீநிதி :-பிராட்டிக்கு நிதியாகவுள்ளவர்.

616 ஸ்ரீவிபாவந :- பிராட்டியை எஞ்ஞான்றும் தரித்திருப் பவர்.

617 ஸ்ரீதர :- பிராட்டியை எஞ்ஞான்றும் தரித்திருப்பவர்.

618 ஸ்ரீகர :- தம் அவதாரங்களுக்குக்கொத்தபடி பிராட் டியை அவதரிக்கச் செய்பவர்.

619 ச்ரேய : ஸ்ரீமாந் - எல்லாப் புருஷார்த்தங்களுக்காகவும் எல்லாராலும் ஆச்ரயிக்கப்படத்தக்க பிராட்டி யானவள் தம்மிடத்தில் எப்போதும் சேர்ந் திருக்கப் பெற்றவர்,

620 லோகத்ரயாச்ரய :- பிராட்டியாரும் தாமுமாகச் சேர்ந்து மூவுலகங்கட்கும் ஆதாரமாயிருப்பவர்.

621 ஸ்வக்ஷ :-அழகிய திருக்கண்கள் முதலான திவ்யேந்த்ரி யங்களுள்ளவர்.

622 ஸ்வங்க : மிகச் சிறந்த திவ்யமங்கள விக்ரஹ முடையவர்.

623 சதாநந்த :- பேரானந்தம் கரைகடந்து மேன்மேலும் பெருகப் பெற்றவர்.

624 நந்தி :- எப்போதும் ஆனந்தம் நிறைந்திருப்பவர்.

625 ஜ்யோதிர் கணேச்வர :- ஒளியுருவமாக விளங்குகின்ற நித்யஸூரிகளின் கூட்டங்கள் எப்போதும் அடி பணிந்து கைங்கரியம் செய்யப் பெற்றவர்.

626 விஜிதாத்மா - அன்பர்கள் விஷயத்தில் தாழ்ந்து இணங்கும்படியிருப்பவர்.

627 விதேயாத்மா - பக்தர்கள் கட்டளையிடப் பெற்று அதற் கிணங்கி நடப்பவர்.

628 ஸத்கீர்த்தி :- சிறந்த கீர்த்தி வாய்ந்தவர்.

629 சிந்நஸம்சய :- 'இவர் வசப்படுவரோ மாட்டாரோ? ஸுலபரோ துர்லபரோ?' என்று தோன்றும் ஸந்தேகங்களைத் தமது ஸௌலப்யத்தைக் காட்டித் தீர்க்குமவர்.

630 உதீர்ண :- உட்கண்ணால் மாத்திரமன்றிக்கே கட் கண்ணாலும் காணலாம்படி வெளிப்படையாக அவதரிப்பவர்.

631 ஸர்வதச் சக்ஷு :- ப்ரத்யக்ஷமாக அவதரித்து எல்லா விடங்களிலும் எல்லாருடைய கண்களுக்கும் புலப்படுபவர்.

632 அநீச :- பக்தர்களுக்குப் பாத்திரமாயிருக்குந் தன்மை யினால் ஸ்வாதந்திரியமில்லாதவர்.

633 சாச்வதஸ்திர :- அர்ச்சா விக்ரஹங்களில் அவற்றிற் கேற்ற வுருவங்களோடு சாச்வதமாக எழுந்தருளி யிருப்பவர்.

634 பூசய :- அன்பர்கள் உகந்தவிடங்களில் படுகாடு கிடப்பவர்.

635 பூஷண :-ஸௌலப்ய குணத்தையே தமக்கு அலங்கார மாகவுடையவர்.

636 பூதி :- அன்பர்களுக்கு எல்லாச் செல்வமுமாக இருப்பவர்.

637 அசோக :- (விசோக: என்பதும் பாடம்) அன்பர்களைக் காப்பாற்றுவதனால் அவர்களை யிழந்தோமென்று துக்கப்படவேண்டாதவர்.

638 சோகநாசந :- துக்கங்களை தீர்ப்பவர்.

639 அர்ச்சிஸ்மாந் :- அப்ராக்ருதமான பேரொளியை யுடையவர்.

640 அர்ச்சித :- அர்ச்சா மூர்த்தியாகி அர்ச்சனைக்கு எளியரானவர்.

641 கும்ப :- வடிவழகு முதலியவற்றினால் பக்தர்களால் விரும்பப்படுபவர்.

642 விசுத்தாத்மா - தமது ஸ்வரூபங்களை யெல்லாம் பக்தர் களுக்கே ஒப்பித்திருப்பவர்.

643 விசோதந :- பக்தர்களைப் பரிசுத்தப்படுத்துகிறவர்.

644 அநிருத்த :- அநிருத்த வ்யூஹத்தின் அவதாரமான ஜநார்த்தநரா யிருப்பவர்.

645 அப்ரதிரத :-விரோதிகளைத் தொலைப்பதில் தடுப்பவர் யாருமில்லாதிருப்பவர்.

646 ப்ரத்யும்ந :-எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்பவர்.

647 அமித விக்ரம :- த்ரிவிக்ரமாவதாரத்தில் மூவுலகங் களிலும் தமது திருவடிப்பதிப்பு அடங்காமலிருப் பவர்.

648 கால நேமி நிஹா - காலச் சக்ரத்தின் வட்டை யாகிய அவித்யை யென்னப்படும் கலிகல்மஷத்தை அழிப்பவர்.

649 சௌரி :- வஸுதேவபுத்திரர். (அல்லது) திருக்கண்ண புரத்தில் சௌரிப்பெருமானென்னுந் திருநாமத் தேடு நிற்பவர்.

650 சூர :- சூரரான இராமபிரானுகத் தோன்றினவர்.

651 சூரஜநேச்வர :- ஸுக்ரீவன் ஹநுமான் முதலான சூர ஜனங்களுக்குத் தலைவர்.

652 த்ரிலோகாத்மா - பக்தாநுக்ரஹத்திற்காக மூவுலகங்களிலும் செல்பவர்.

653 த்ரிலோகேச :- மூவுலகங்கட்கும் பிரபு.

654 கேசவ :- பிரமனுக்கும் சிவனுக்கும் தலைவர்.

655 கேசஹா - கேசியென்கிற பெயருடன் குதிரை வடிவாக வந்த அசுரனைக் கொன்றவர்.

556 ஹரி :- ஆர்த்திகளை ஹரிப்பவர்.

657 [illegible]நவ :- விரும்பினவற்றை யெல்லாமளிப்பவர்.

[illegible] க்[illegible] :- தாம் [illegible] அளித்த பேறுகளைப் பரிபாலனம் செய்பவர்.

[illegible]59 காமீ - சிறந்த ப[illegible]ன்களெல்லாம் தாம் கொடுக்க அவை தம்மி[illegible]த்தில் குறையற நிரம்பியிருக்கப் பெற்றவர்.

[illegible]60 காந்த :- அளவுக[illegible]ந்த அழகு வாய்ந்தவர்.

661 க்ருதாகம :- *க[illegible]லைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொ[illegible]ற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வா[illegible]னிவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினலருள் செய்தவர்.

662 அநிர்தேச்யவபு :- இவ்விதமென்று நிரூபிக்கக் கூடாத திவ்யமங்கள விக்ரஹங்களை யுடையவர்.

663 விஷ்ணு :- எல்லாவற்றையும் வியாபித்திருப்பவர்.

664 வீர :- *சாதுசனத்தை நலியும் தீயவர்களைத் த[illegible]ர்க்க வல்ல வீர்யமுடையவர்

திருவரங்கன் உ...

இரண்டாம் பாகம் ஸ்ரீவேணுகோபால...

## 21. முதல் வெற்றி

ஆனல், "பாமனி அரசை யார் எதிர்த்து நிற்பது..." என்று புக்கராயர் கேட்டதும், எல்லோரும் வாய்மூடி மௌ...ளமாக இருந்தார்கள்.

பாமனி என்ற சொல்லே அவர்களையெல்லாம் கவ...யில் ஆழ்த்தி விட்டது. என்று அறிந்ததும், புக்கரா... எழுந்தார்.

மெதுவாக புன்னகை புரிந்து, "அவையீர்களே! ப...னிக்காகக் கவலைப்படுவதை நிறுத்துங்கள்! நாமும்... நிறுத்துவோம்" என்றார்.

எல்லாரும் ஆச்சரியத்துடன் புக்கராயரைப் ... தார்கள்.

"ஆமாம், அவர்களைப்பற்றி எத்தனை நாள் கவ... பட்டுக்கொண்டே வேறு காரியங்களில் ஈடுபடா... இருப்பது? இப்போது நிச்சயமாகவே தீர்மானித்து விட்டேன். தெற்கு நாடுகள் முழுவதையும் நம் மண்டலத்தில் சேர்த்துத்தான் ஆகவேண்டும்" என்றார் புக்கராயர்.

துள்ளியெழுந்தார் குமார கம்பணர்.

"தந்தையே! இந்த அருஞ்சொல்லுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன். உத்தரவு போடுங்கள்!" என்றார் மகிழ்ச்சி பீரிட.

ரரா! பொறு'' என்றார் புக்கராயர் ''இது நான் ர்மானம் அல்ல! அரங்கன் செய்த தீர்மானப்'' தாடர்ந்தார்.

ன்னவா. அரங்கன் தங்களுக்கு கட்டளையிட்டாரா?'' கோபண

ாபணா!'' என்றார் புக்கராயர். ''அரங்கன் எமக்கு கட்டளையிட்டால் மிகவும் தன்யனாவேன். ஆனால் பாக்கியத்திற்கு இன்னும் நான் ஆளாகவில்லை. ஆனால் அரசியார் தேவாமி இருபது வருடங்களாகவே இரு சைகளை எம்மிடம் தெரிவித்து வந்திருக்கிறாள். இரண்டும் ாதாரண ஆசைகள். ஆனால் நிறைவேற்றுவது தான மிகவும் கஷ்டம்'' என்றார் புக்கராயர்.

''மண்டலாதிபதிக்குமா கஷ்டம்?'' என்று கேட்டார் னுவமங்கு.

''ஆமாம் ராணியாரின் ஆசைகளைச் சொல்கிறேன் னுங்கள்! திருவரங்கத்தில் அரங்கனது தேர்த் திருவிழா றை நடத்தவேண்டும். தெற்கே தாமிரவருணியின் ணிய நீரில் ஆழ்ந்து குளிக்கவேண்டும். இவ்வளவுதான் ஆசைகள்! ஒன்றல்ல, இரண்டல்ல, இருபது ஆண்டு க் கூறிவருகிறாள்! நானும், அதற்கென்ன. எல்லாம் நாளில் நிறைவேறும் என்று கேட்கும் போதெல்லாம் ல்லிக்கொண்டு வருகிறேன்.

ஆனால் சென்ற மாதம் அரசி என்னை அந்தப்புரத்தில் ஒரு தனி உள்ளுக்குள் அழைத்துப்போனாள் அங்கே அதன் கதவுகளைத் திறந்தபோது அதிர்ந்துவிட்டேன். ஒரே குவியலாகத் தங்கப் பணங்களும், கூறைகளும் (புடவைகள்) குவிந்திருந்தன. இவை எதற்கு? என்று கேட்டேன்.

''பணங்கள் எல்லாம் அரங்கனுக்குச் சேர்ந்தவை கூறைகள் தாமிரவருணிக் கரையில் தானம் வழங்குவதற்காக'' என்றாள். அப்போது தான எனக்கு ஒரு உண்மை

புலப்பட்டது. அவளது ஆசைகள் ஒரு நாளில்
என்று அவநம்பிக்கையில் சொல்லி வந்திருக்கிறே
அவளோ நம்பிக்கையிலேயே வாழ்ந்து இருக்க
விடில் இருபது வருடங்களாக ஒவ்வொரு தங்கப்
பொறுமையுடன் இவ்வளவு சேர்த்திருப்பாளா?

''அன்று ராத்திரி முழுவதும் அது
நினைத்தேன். பத்து வருடங்களாக அவள்
வளர்ந்தது போலத்தானே தென்நாடுகளில்
வளர்த்து வந்திருப்பார்கள்! சொல்லப் போனு
ஆண்டுகள் அல்ல; இருபது ஆண்டுகளாக நம
வளர்த்து இருப்பார்களே! வேதமார்க்கத்துச் சமய
எல்லாம் ரட்சிப்பதற்கு இந்த விஜயநகர மண்
தோன்றியிருக்கிறதே; நிச்சயம் வருவார்கள் என்று
அவர்கள் நினைத்து வந்திருப்பார்கள்! அவர்கள் எல்
குமே உத்தரமாக, 'ஒரு நாளில் எல்லாம் நடக்கும்'
எத்தனை நாள் நான் சொல்லிக் கொண்டே இருப்பே

''இப்படி நான் யோசிக்கும் வேளையில் தான் தி
யிலிருந்து யாதவராயரும், கோபணுவும்
தூதுவர்கள் இங்கே வந்தார்கள், அடுத்தடுத்து
வந்தபோது, இதுவும் தெய்வச் செயல் தா
நினைத்தேன். இதனுல் என் நினைவுகள் பர
சீக்கிரமே இந்த முடிவுக்கு என்னை வரச்செய்தன
தெற்கே நமது மண்டலத்தை இனி விஸ்தரிக்
இதற்குத் தடை இனி இல்லை. குமாரா, இதைத் தெரிவி
பதற்குத் தான் உங்கள் எல்லோரையும் விஜயநகரத்துக்கு
அழைத்தேன்.''

இவ்வாறு உணர்ச்சியுடன் சொல்லி புக்கராயர்
அமர்ந்ததுதான் தாமதம், கோபணு எழுந்தார்.

''மன்னவா நீங்கள் நீடூழி வாழ்க! என் சபதத்திற்கு ஒரு
வழி செய்துவிட்டீர்கள்!'' என்றார்.

எழுந்து, "மன்னவா! என் ஆசைகளும்
'கு வழி வகுத்து விட்டீர்கள். தென் கடல்
த மண்டலம் வியாபிக்க வேண்டும் என்று
அது நிறைவேறப் போகிறது." என்றார்.

விஜய நகரத்திலிருந்து படைகளைத் தெற்கே
ாவது ...ற்றி பேசினார்கள். தலை நகரிலிருந்து
கொண்டு போவதால் ஏற்படும் ஆபத்துக்களை
பேசினார்கள். அதுவும் பாமனிக்காரர்கள் துங்க
யின் வடகரையில் இருக்கும் தறுவாயில் அப்படிச்
மா என்றும் ஆலோசித்தார்கள். (துங்கபத்திரை
ன் எல்லை. அதன் தெற்கே விஜய நகரம்! வடக்கே
னி ராஜ்யம்!)

ல்லா விஷயங்களையும் ஆற அமர அலசி முடிவுகளுக்கு
ற்குள் இரவு நேரமாகியது.

வர்கள் முடிவுகளில் முதலாவது, சம்புவராயர்களைத்
அவர்கள் ராஜ்யத்தை இணைத்துக் கொள்வது.

ப்படிச் செய்யும் போது மதுரை சுல்தானியர்களின்
க்கைகளைக் கவனிக்க வேண்டியது.

ன் பிறகு சந்தர்ப்பங்கள் சரியாக இருந்தால் மதுரை
யர் மீதும் உடனே படையெடுத்து வருவது!

ானங்கள் செய்த பின்னர் புக்கராயர் தம் குமார
ம்பணரை அருகில் அழைத்து, உணர்ச்சிப் பெருக்
அவரைத் தழுவி, தாம் அணிந்திருந்த விலையுயர்ந்த
ரத்தின மாலைகளை அவருக்கு அணிவித்து, மறுநாளே
ன்றாக இருப்பதால், படைகள் புறப்படலாம் என்று கூறி
விட்டு, எல்லோரிடமும் விடைபெற்று அரண்மனைக்குள்
சென்றார்.

கம்பணர் தமது சமுத்திரம் போன்ற சேனைகளுடன்
தெற்கு நோக்கிச் சென்று கர்நாடக நாட்டில், ஆறு தினங்
கள் பிரயாணம் செய்து, தமது ராஜ்யத்தின் தலைநகரான
முள்வாய்ப் பட்டணத்தை அடைந்தார்.

ஐந்து தினங்கள் கம்பணர் தலைநகரில் ஆயத்தங்களைச் செய்து கொண்டார்.

ஆறும் நாள் படைகளோடு மீண்டும் புறப்ப

கிழக்கு முகமாக ஒருவாரம் பிரயாண பாலாற்றின் கரையிலுள்ள விரிஞ்சிபுரத்தை அடைந்தார்கள்.

விரிஞ்சிபுரம் சம்புவராய ராஜ்யத்தைச் சே விஜய நகரத்திலிருந்து பெரும் படை ஒன் றில் தண்டு இறங்கியிருக்கும் செய்தி சம்புவரா ராஜ நாராயணனுக்கு எட்டி விட்டது.

அவர் உடன் தமது படைகளைச் சித்தம் கொண்டு, காஞ்சிபுரம் கோட்டையைப் பலவி பலப்படுத்தத் தொடங்கி விட்டார்.

கம்பணரின் படைகள் விரிஞ்சிபுரத்தில் சில தங்கி, தகுந்த தருணத்தை எதிர்பார்த்த இருந்தன.

சூசகமான தருணம் கிடைத்தவுடன் கம்பண களைப புறப்படச் சொல்லி வேகமாக காஞ்சீ நோக்கிப் பிரயாணப் பட்டார்.

காஞ்சீபுரம் பெரும் தாக்குதலுக்கு உட்பட்டது.

உள்ளே தங்கியிருந்த ராஜ நாராயண சம்புவர தமக்கு எங்கிருந்தாவது ஏதாவது உதவி வரும் எண்ணியிருந்தார்.

ஆனல் எந்த உதவியும் வருவதற்கில்லை என்று நான்கு நாட்களில் தெரிந்து விட்டது.

கம்பணரின் படைகள் இதற்கிடையில் தங்கள் தாக்குதலை உக்கிரமாக்கிக் கோட்டையை உடைக்க முயலவே,

சம்புவராயர் இரவுக்கிரவே மகனுடனும் படைத் தளபதிகளுடனும் கோட்டையை விட்டு வெளியேறி நேராகத் தமது தலைநகரான ராஜ கம்பீர மலைக்குச் சென்று விட்டார்.

காஞ்சீபுரம் கோட்டை கம்பணரிடம் சரணடைந்தது.

(தொடரும்.

# ஜாதகப் [illegible]

(பிற்பகல் 2மணி

தென்கலை வடகலை ஜாதகங்கள் இலவசமாகப் பதிவு செய்து பரிமாறப்படும் [illegible] ரூ 5-ம், தபால் மூலம் விவரம் பெற ஒவ்வொரு ஜாதகத்திற்கும் ரூ 2-ம் M. O செ[illegible] வேண்டும். பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

பதிவு செய்தவர்களில் இதுவரை 593 ப்ரம்மாச்சாரிகளின் 359 கன்னிகைகளின் கல்யாணங்கள் நடந்திருப்பது ஸ்ரீ ஆசார்யன் திருவருள்.

பெண் பதிவு எண்ணைக் குறிப்பிட்டு Charts VII to XII ரூ. 1-25, தபால் செலவு 0.45 M O. அனுப்பினால் அவைகளைப் பெறலாம்.

பதிவு செய்து 6 மாத காலமாய் நேரிலோ கடிதம் மூலமோ தொடர்பு இல்லாதவர்கள் இத்திட்டத்தினின்று நீக்கப்படுவர். மறுபதிப்புக்குப் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், கட்டணம் ரூ 2.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

K. R. ஸ்ரீனிவாசாசாரி,

25, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

(ஸ்ரீ ஆசார்யன் அலுவலகம் அல்ல)

வ-வடகலை, தெ-தென்கலை, *வேறுகலை ஆக்ஷேபனை இல்லை; வே-வேலைக்குப் போகும் பெண் தேவை; ப-பட்டதாரி தேவை.

கன்னிகைகள் :

G 1678 கர்கி. அவிட்டம் 27-10-63 B.Sc., Computer (M Com) பரதம் தெ* 5'2''

G 2391 ஷடமர்ஷணம் பூரட்டாதி 27-8-61 S.S.L C. ஹிந்தி(ரா) வ* 5'

G 2418 காஸ்யபம் கேட்டை 22-9-55 P.U.C தெ 5' 2''

பிரம்மச்சாரிகள் :

B 1482 கர்கி. மிருகசீருஷம், 31-7-59 B. E Hindustan mot[illegible]s ரூ 1500 தெ* 5' 6'' ப.

B 1641 ஸ்ரீவத்ஸய பூராடம் 11-9 51 B.Sc, Ponnisugars [illegible]ாவேரி தெ 5'9'' வே

B 2044 பாரத்வாஜம் பரணி 10-12-51 B.Com, M F L ம[illegible]ணலி ரூ 200 தெ 5' 4'' ப.

B 2081 ஆத்ரேய திருவோணம் 2[illegible]-6 54 B. A. Sy Gr டீச்[illegible]ர் ரூ 875 வ* 5' 6'' வே.

B 2105 கௌண்டின்யம் ரேவதி 8-10-57 B. A. Modi. Con[illegible]

க்கத் தொடர்ச்சி)

தற்கு வலிமை இருந்தால் நான் இப்படி துன்புறவா உலகில் ஒருவன் மற்றொருவனுக்கு அடிமையாக தைப் பார்க்கிறன். ஆனால் ஒருவன் எல்லோர்க்கும் மயாக இருந்தால் அவன் கதி என்னவாகும்? எல்லோ உனக்கு அடிமை! ஐம்புலன்களையும் அடக்கியாள்வதில லவன்! நீயோ ஹ்ருஷீகேசன்! நான் அவ்வாறு இருக்க மோ! ஆசை, கோபம், போகம் முதலியவற்றுக்கு பட்டவன். என்னிடம் உள்ள குறைகளை ஐப்புலன ம் நன்றாக உணர்ந்து கொண்டன எங்கெங்கோ னே இழுத்துச் செல்லுகின்றன! நீ கண்ணனைப் பிறந்து ந்த காலத்தில் வழிகாட்டியாக இருந்துப் பஞ்சபாண்ட களை ந... ழி... இட்டுச் சென்றாய்; அவர்களும் உன்னைப் பற்றினர்கள்; நன்மையடைந்தார்கள்.

எனக்கு ஐந்துபேர் வழிகாட்டுகிறார்கள்; ஐப்புலன் ாகிய ஐந்து பேர்களில் ஒருவரும் என்னை நல்வழியில ழைத்துச் செல்லவில்லை அவர்களைப் பின்பற்றுவதைத் பிர எனக்கு வேறு வழியில்லை அவர்கள் போட்டியிட்டுக் ாண்டு என்க்கு மேன்மேலும் துன்பத்தையே அளிக் ார்கள்!

கூடலூர் எம்பெருமானே! உன் அடிமை பிறர்க்கு அடிமையாகலாமோ! உனக்கு அடிமையாகிய நான் ஐம புலன்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறேனே. உன்னால் துன புறுகிறேனே! கருணைக் கடலே! நான் துன்புறுவதைக கண்டும் எவ்வாறு பொறுத்திருக்கிறாய்! ஒவ்வொரு புலன களாலும் ஏற்படும் துன்பத்திலிருந்து என்னைப் போன்றவர களைக் காப்பதற்கன்றோ நீ பஞ்சாயுதங்களையும் அணிந்திருக கிறாய்! அடியேனைக் கைவிடலாமோ? என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

உண்டு கேட்டுற்று மோந்துப் பார்க்கும் ஐவர்க்கே
தொண்டு படலாமோ உன்தொண்டனேன்—விண்டிலங்கு
மாடலூர் நேமி முதலைம் படையாய் அன்புடையாய்
கூடலூராய் இதனைக் கூறு

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-75

# தென்கலை வடகலைச் [illegible]ச
# ஓர் ஆராய்ச்சி

(1) பகவானின் ஸ்வரூபத்தை முதலில் எடுத்துக் கொள்வோம்

(i) பேதத்துக்குண்டான முதல் விஷயம் அணுவ்யாப்தி —அணுஸ்வரூபமான ஜீவாத்மாவுக்குள் பகவான் பரவியிருக்கும் தன்மை.

ஆங்கிலத்தில் : M. A. துரைஸ்வாமி ஐயங்கார்
தமிழாக்கம் : M. N. பார்த்தசாரதி

**வடகலைவாதம் :** பரமாத்மா அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரவியிருக்கும் தன்மை (infinite-omnipresent) உடையவன். அளவற்ற, பெரும் ஆகாரத்தையுடைய அவன் அணு அளவினனான ஜீவாத்மாவுக்குள் புகுந்து வியாபிப்பது என்பதை இயலாது. அவன் தன்னையே அணுக்களாகப் பாகம் செய்து கொண்டு ஜீவாத்மாக்களுக்குள் புகுவது என்பதும் ஸாத்தியமில்லை. அவன் ஜீவாத்மாக்களை வெளியிலிருந்து சூழ்ந்து கொண்டு அவைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறான். பரமாத்மாவின் உண்மையானதும் அடிப்படையானதுமான ஸ்வரூபம் எல்லாவற்றையும் கடந்திருப்பது போல் (transcendental) என்பதால் அவனும் ஜீவாத்மாவும் கூட்டுக் குடியிருப்பது போல் (co-existence) அமையுமேயொழிய சிறியதுக்குள் பெரியதின் உள்ளடக்கம் (immanence) ஆகாது.

**தென்கலைவாதம் :** பரமாத்மாவுக்கு அபாரசக்தி (omni-potence) உண்டு. அந்த சக்தியினால் எங்கும் எதிலும் ப்ரவேசிக்கும் ஆற்றல் படைத்தவனாயிருக்கிறான். (இதனை அகடிதகடனா ஸாமர்த்தியம் என்று சொல்வார்கள்). அவனு

டைய விபுத்வம் (எங்கும் பரவியிருக்கும் தன்மை) அவனை ஒவ்வொரு அணுவிலும் ஒரே சமயத்தில் குடியிருக்கச் செய்கிறது. அம்மாதிரி அவன் குடி கொள்ளும் போது தன்னுடைய அம்ச மாத்திரமல்லாமல் தன்னுடைய முழுமையான நிஜ ஸ்வரூபத்துடன் ஏகபோகமாகக் குடி கொண்டிருக்கிறான். எதனையும் கடந்திருக்கும் தன்மை (transcendence) எதனுள்ளும் அடங்கியிருக்கும் தன்மை (immanence) இவ்விரண்டு தன்மையுமே பகவானின் ஸ்வரூபம்.

**விளக்கம் :** பகவான் உள்ளடங்கியிருக்கும் தன்மையுடையவன் என்பதை வடகலைவாதம் முழுதும் மறப்பதில்லை. கிருஸ்துவ, யூத, இஸ்லாமிய மதங்கள் கடவுளின் கடந்திருக்கும் தன்மையை பெரிது படுத்துகின்றன. அதன் காரணங்கள் (i) பரமாத்மாவின் அப்ராக்ருத ஸ்வரூபத்தின் புனிதத் தன்மையை உயர்த்திக்காட்டி அது, ப்ரகிருதியின் ஸம்பந்தத்தால் ஏற்படக்கூடிய மாசுகள் குறைகள் ஒன்றுமின்றித் தூய்மையுடன் இருக்கிறது என்பதைச்சுட்டிகாட்டுவது. (ii) 'கடவுளே எல்லாம், 'எல்லாமே கடவுள்' எனனும் வாதத்தை (Pan-theism) மறுப்பது. அவர்கள் விக்ரஹ வழிபாட்டை மறுப்பதன் காரணமும் இதுவே. அப்ராக்ருத தன்மை பொருந்திய கடவுளுக்கு உருவம் பொருந்தாது. உருவம், வடிவம், அளவு போன்ற குணங்கள் ப்ரக்ருதிக்குச் சொந்தமானவை. அப்ராக்ருதத் தன்மையுடைய பரம் பொருளை ப்ரக்ருதி ஸம்பந்தம பெற்ற உருவத்தாலோ, வடிவத்தாலோ தோற்றுவிக்க இயலாது

நம் தேசத்திலும் அத்வைதவாதிகள் ப்ரம்மத்தினுடைய உள்ளடங்கியிருக்கும் தன்மையை மறுப்பதற்கு காரணம் (i) கடவுள் ஜீவாத்மாவுக்குள்ளோ, ப்ரக்ருதிக்குள்ளோ அடங்கினால் அவைகளுக்குண்டான மாசுகள், குற்றங்கள், கடவுளையும் அணுகும். (ii) ஜீவன், ப்ரக்ருதி என்பவை, உண்மையில்லை, மாயையால் ஏற்பட்ட தோற்றம். அவை

கள் உண்மையில் கடவுளுடன் கூடியிருப்பவையானால் அப்பொழுது கடவுளின் விபுத்வம் ஒப்பற்ற தன்மை குறைக்கப்படும். இவ்வாதங்களையெல்லாம் உடைத்து, 'கடவுள் எங்கும் உளன் எதிலும் உளன்' என்றும் தத்வத்தை ஸ்தாபிப்பதையே, எம்பெருமானார் தனது பெரும்பணியாகக் கொண்டார். ஆகையால் எம்பெருமானாருடைய பக்தர்களான வடகலை ஸ்ரீவைஷ்ணவர்களும் கடவுளின் உள்ளடங்கியிருக்கும் தன்மையை அடியோடு நிராகரிப்பதில்லை. அத்வைதவாதிகள் போல் ஜீவன், ப்ரக்ருதி இவை மாயையால் ஏற்படுத்தப்படும் தோற்றங்கள் என்பதையும் ஒப்புக் கொள்வதில்லை. கடவுள் எங்கோ பரமபதத்திலிருக்கிறான்; ப்ரக்ருதி ஜீவன் அசுத்தப், பாவகரமானது. கடவுளுக்கும் [illegible]க்கும் தொடர்பு கிடையாது என்றும் வாதிப்பதில்லை. அவர்களுடைய வாதம் "கடவுள் எல்லாவற்றையும் கடந்திருப்பதால், ஒவ்வொன்றுக்குள்ளும் நுழைவதில்லை, அவைகளுடன் கூடியிருக்கிறான் என்பது. தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாதமோ "கடவுள் எங்கும் பரவியிருக்கிறான், எதனுள்ளும் புகுந்து ஏகபோகமாக அடங்கியிருக்கிறான்" என்பது.

(2) பேதத்துக்குண்டான இரண்டாவது விஷயம் ஸ்ரீ (மகாலக்ஷ்மி)யின் ஸ்வரூபத்தைப் பற்றியது.

வடகலை வாதம்: பகவானைப்போலவே ஸ்ரீயும் எங்கும் வ்யாபித்திருக்கும் தன்மை பெற்றவள். மேலும் பகவானைப் போலவே ஸகலபாபங்களையும் போக்கி முக்திக்கு உபாயமானவள்.

தென்கலை வாதம் : ஸ்ரீயின் விபுத்வம் அவளுடைய ஸ்வரூபத்தால் (தன்மை) அல்ல, அவளுடைய சக்தியினால். கடவுளைப்போல் ஸ்ரீயும் ஸ்வரூபத்தால் விபு (விபுத்வம் பெற்றவள்) வாக இருந்திருந்தால் அவளும் ஒரு கடவுளாகக் கருதப்படவேண்டும். ஒரு பரம்பொருள் இரண்டு ரூபங்களில்

இருக்க இடமளிக்கிறது. நாராயணனே அல்லது ஸ்ரீயோ முழுமுதற்கடவுளாக இருக்கமுடியாது, சாக்தம், சைவம், முதலியவற்றில் சிவன், சக்தி இருவரும் சமம் என்று கருதுவது போலாகிவிடும். ஸ்வரூபத்தில் ஸ்ரீ பகவானுக்கு ஒரு அடைமொழி (attribute) யாகத்தானிருக்கிருள். சூரியனுக்கு வெளிச்சமிருப்பது போலப் பகவானுக்கு ஸ்ரீ இணைபிரியாத ஒரு குணமாய் அமைந்திருக்கிருள். இந்தத் தன்மையாலும், தன்னுடைய குறைவற்ற ஞானத்தாலும், சக்தியாலும் ஸ்ரீ, விபுத்வம் பெறுகிருள் ஆகையால் அவளும் பகவானைப் போல் பூஜைக்குரியவள் :

(3) பேதத்தின் மூன்ருவது விஷயம் பகவானின் க்ருபையைப் பற்றியது.

வடகலைவாதம் : பகவானின் க்ருபை முயற்சியினுல்தான் கிட்டும்; அது தானுகவோ தகுதியற்றவர்களுக்கோ கிட்டாது. கடவுளின் க்ருபை ஜீவனின் முயற்சியையும் செயலையும் பொறுத்திருக்கிறது. ஜீவாத்மாவின் உஜ்ஜீவனத்தில் பகவானுடைய முயற்சிக்கு ஜீவனின் ஒத்துழைப்பும் அவசியம். உதாரணமாக குரங்கு ந்யாயம்—மர்க்கட ந்யாயம் கூறப்படுகிறது குரங்குக்குட்டி தன் முயற்சியால் தன் தாயைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறது. தாய்க்குரங்கு அதைத் தாங்கிக் கொண்டு மரக்கிளைகளில் தாவிச்செல்கிறது குட்டியைத் தூக்கிச்செல்லத் தாயின் முயற்சியில் குட்டியின் ஒத்துழைப்பு இருக்கிறது.

தென்கலை வாதம்: பகவானின் க்ருபை நிர்ஹேதுகமானது. அதற்குக் காரணமும் தேவையில்லை. காரியமும் தேவையில்லை. ஜீவனின் முயற்சியோ, ஒத்துழைப்போ அவசியமில்லை. பகவானுடைய க்ருபை ஜீவனை நோக்கி வெள்ளம் பாய்ந்து வருவதுபோல் தானுகவே பாய்ந்து

வருகிறது. உதாரணமாக 'பூனை ந்யாயம் — மார்ஜார ந்யாயம்' கூறப்படுகிறது பூனை தன்குட்டியை தன்வாயினால் கௌவிக்கொண்டு வெளியேறுகிறது; இதில் குட்டியின் முயற்சியோ ஒத்துழைப்போ எள்ளளவும் கிடையாது.

விளக்கம் : தென்கலை—வடகலை பேதங்களில் இது ஒரு முக்கியமான அடிப்படை பேதம். இதே மாதிரியான அடிப்படை பேதத்தை கத்தோலிக்க—ப்ராடெஸ்டெண்ட் கிறிஸ்துவர்களிடையே காணலாம். கத்தோலிக்கர்களுடைய கொள்கை வடகலை கொள்கையான ஸஹேதுக க்ருபையை-காரண—கார்யத்தையொட்டிய க்ருபை என்பதையொத்திருக்கிறது. ப்ராடெஸ்டெண்ட் கொள்கையான, பகவானுடைய அருள் தானாகவே கிடைக்கும் என்ற த்ருட நம்பிக்கை (faith) தென்கலை ஸம்பிரதாயமான நிர்ஹேதுக க்ருபையை யொத்திருக்கிறது கத்தோலிக்கர் கொள்கை பகவானுடைய அருளுக்குக்காரணம் அவனுடைய அடியார் செய்யும் நற்பணிகள் என்பதை வற்புறுத்துகிறது. பகவானின் அருள் ப்ரபத்தியால் பெறப்படுகிறது என்னும் மார்ட்டின்லூதரின் கொள்கை தென்கல் வாதத்தை யொத்திருக்கிறது.

(தொடரும்)

# கல்வெட்டுக்களில் வைணவம்

- Dr.K.V.ராமன்

## வையம் கண்ட வைகாசித் திருநாள்

காஞ்சி ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி கோவிலில் தொன்று தொட்டு பல உத்சவங்கள் விமரிசையாக நடைபெற்று வந்துள்ளன. வருடந்தோறும் வெவ்வேறு காலங்களில் நடைபெற்றுவரும் உத்சவங்களுக்கு பல அரசர்களும் அமைச்சர்களும் ஜீயர்களும் பல அறக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளனர். இவற்றில் மிகப் பிரசித்தமானது வைகாசி மாதம் நடைபெறும் பிரம்மோத்சவமாகும். 15-ஆம் நூற்றுண்டின் கல்வெட்டொன்று திரு வைகாசித் திருநாளைப்பற்றி பல செய்திகளைத் தருகின்றன. முதல் நாளில் நடைபெறும் உத்சவம் ஆழ்வார் திருநாள் என்று விளங்கிற்று. இத்திருநாள்களில் பெருமாள் வீதிவலம் செய்யும்போது வழியில் பல மண்டபங்களில் எழுந்தருளியதை நாம் அறிகிறோம். கருட மண்டபம், அபிஷேகமண்டபம், திம்மராஜ மண்டபம், நம்பி மண்டபம் வழியே சென்று கடைசியாக கங்கை கொண்டான் மண்டபம் அடைந்த குறிப்பு காணப்படுகிறது. அதுபோல உத்சவ காலங்களில் பல தோப்புகளுக்குள் பெருமாள் எழுந் ருளியது குறிக்கப்படுகிறது. சேரமான் பெருமாள் திருத்தோப்பு, அரப்பெரும் செல்வீதி திருத்தோப்பு, செண்பகத் திருத்தோப்பு, ராஜேந்திரத் தேவர்த் திருத்தோப்பு போன்ற தோப்புகள் இருந்ததை நாம் அறிகிறோம்.

கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் மற்றொரு முக்கிய திருவிழா ஐப்பசி மாதந்தில் பூதத்தாழ்வார், பேயாழ்வார்க்கும் திருநட்சத்திரச் திருவிழாக்களாகும். கி. பி. 1129-ஆம் ஆண்டு கல்வெட்டொன்று அவ்வாழ்வார்களுக்கு 13 நாட்கள் உத்சவம் நடைபெற்றதைக் குறிக்கின்றது. அந்நாட்களில் அருளாளப் பெருமாளுக்கு 81 கலச திருமஞ்சனம் நடைபெற்றது. ஆனி மாதம் நடைபெறும் ஆனி கருடோத்சவம் பெரியாழ்வாரின் பரதத்துவ நிர்ணயம் நினைவாக நடைபெறுகிறது. அத்திருநாள் 'திருப்பல்லாண்டு சிறப்பு' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றது. மதுராந்தக பொத்தப்பி சோழன் என்னும் அரசன் ஆடிமாதம் நடைபெறும் திருவாடித்திருநாளுக்கு பல சிறப்பு கட்டளைகள் வழங்கியுள்ளான். கஜேந்திர மோக்ஷம் திருநாளுக்கு பெருமாள் கங்கை கொண்டான் மண்டபம் வரை எழுந்தருளி திரும்பி வந்து அக்நிஸ்தோம யாகத்தைக் கண்டருளியதை ஓர் கல்வெட்டு குறிக்கின்றது.

ஆவணிமாதம் நடைபெறும் திருப்பவித்திர திருநாளுக்கு (பவித்ரோத்சவம்) அச்சுததேவராயர் காலத்தில் பல கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. கி பி. 1538-ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயந்தி உத்சவத்திற்கும் உறியடி உத்சவத்திற்கும் திருப்பதியிலுள்ள வட திருவேங்கட ஜீயர் நன்கொடை கொடுத்து சிறப்பாக கொண்டாடினர். திருவடி கோவில் அருகில் உறியடி உற்சவம் நடைபெறுகிறதை அறிகிறோம்.

மார்கழி மாதம் சிறப்பாகக் கொண்டாடப்படும் உத்சவம் திருவத்யயனோத்சவமாகும். ஸ்ரீவைஷ்ணவக் கோவில்களுக்கு இது ஒரு விசேஷமான உத்சவமாகும். இது சிறப்பாக நடைபெற விஜயநகர மன்னர்கள் பல அறக்கட்டளைகள் கொடுத்துள்ளனர். திருவாய்மொழி ஆரும் பத்து

சேவிக்கும் நாளை "உலகமுண்ட பெருவாயன் சிறப்பு," என்று வழங்கிறது கல்வெட்டொன்று.

பங்குனி மாதம் மலையாள நாச்சியாருடன் நடைபெறு திருக்கல்யாண உத்சவம் கி. பி. 1582 ஆண்டு கல்வெட்டி "சேரகுலவலலி நாச்சியார் பங்குனி உத்திர சாத்துமுறை என்று குறிக்கப்படுகின்றது. அவ்வமயம் பெருமாளுடன் மலை யாள நாச்சியாரும் சேனை முதலியாரும் தளவாயத் தோப் புக்கு எழுந்தருளினர். இதுபோல மற்றைய மாதங்களி நடைபெறும் உத்சவங்களும் பல கல்வெட்டுகளில் குறிப் பிடப்படுகின்றன.

இவற்றைத் தவிர சில விசேஷ பூஜைகளும் சந்திகளும் இக்கோவிலில் நிறுவப்பட்டன. நாட்டின நன்மைக்காகவும் அரசர்கள், அமைச்சர்கள் போன்றோரது பிறந்த நாளின் போதும், அவர்கள் நன்மைக்காகவும் இவை அவ்வப்போது நிறுவப்பட்டன. மூன்றும் குலோத்துங்க சோழனது காலத் தில் கோதண்டராமன் சந்திக்காக 2000 பொன் வழங்கப் பட்டது. இதுபோன்று, வீர கேரளன் சந்தி, சுந்தரபாண்டி யன் சந்திக்காக 3000 பொன் வழங்கப்பட்டது. 45 பிரா மணர்களுக்கு போஜனத்திற்கு வசதி செய்யப்பட்டது. சம்புவராயர் காலத்தில் ஆளப்பிறந்தான் சந்தி, தெலுங்க சோழ அரசன் பெயரில் கண்ட கோபாலன் சந்தி போ விசேஷ சந்திகளும் நடைபெற்றன.

# திருக்கூடலூர்

சங்கீத வித்வான் மன்னார்குடி பார்த்தசாரதி ஐயங்கார்

ராகம் : கமாஸ் ஆதிதாளம்

### பல்லவி

; வை - - யம்கா - - த்த - |
; பெருமா - | னே - - உனைக் - ||
; கை - தொழுதேன் ஸ்ரீ |
பத்மா - ஸ | நி - மகிழும் - ||

(வையம்)

### அநுபல்லவி

மெய் ஞா - னம் அளிக்கும் |
; வா - னவர் | கோ - - னே ||
; உய்யும் வகையருள்வாய் |
; திருக்கூட | லூர் திகழ் - ||

(வையம்)

### சரணம்

; சு - -த்தஸத் வ - வி |
மா - னம் - தி | கழ்ந்திடும் - ||
பக்தி செய் நந்தக முனி |
; மங் கை மன் | னன் போற்றும் ||
; நித்தியனே - நா - த - |
; வே - த - வி | ஞே - - தா - ||
; முக்தியளி - த்திடும் - |
; தா - மரைப் பா - - தா - - ||

(வையம்)



# ஸ்ரீராமானுஜர் வரலாறு

சாண்டில்யன்

## 23 மணலில் கிடந்த மாலை

மஹான்களுக்கு விரோதிகள் ஏன் ஏற்படுகிறார்கள்? அவர்களிடமுள்ள குறைகள் காரணமா? இல்லை அவர்களிடமுள்ள நிறைவுகள்தான் காரணம். மஹான்களின் அப்பழுக்கற்ற ஞானம், அவர்கள் மேதாவிலாசம் புகழைத் தருகின்றன. அந்த புகழ் அறிவற்றவர்களின் பொறாமையைத் தூண்டுகிறது, பொறாமை விரோதிகளை சிருஷ்டிக்கிறது. இரண்டாவதாக மஹான்களின் நெறிதவறாத வாழ்க்கை நெறி, தளர்ந்தவர்களுக்கு இடைஞ்சலாயிருக்கிறது. சுத்தமான கட்டுப்பாடுகளால் ஏற்படும் சங்கடங்கள் இதரர்களின் லௌகீக லாபத்தை பாதிக்கின்றன. அதனாலும் விரோதம் முளைக்கிறது. அப்படி முளைத்ததுதான் ஸ்ரீரங்கம் கோவில் ஸ்தானத்தார்களின் விரோதம்.

உடையவர் ஏற்கனவே செய்த கோவில் நிர்வாக முறைகளை உறுதிப்படுத்தினார். முறையாக கோவில் திட்டங்களை நடத்திவைப்பதில் அதுவரை கோவில் துறை நிர்வாகிகள் அனுபவிக்காத கண்டிப்பை கைப்பிடித்தார். இதனால் கோவிலைச் சுரண்டுவதும், இஷ்டப்படி சுகமாக கோவில் காரியங்களை காலம் பாராமல் நடத்துவதும், கோவில் அதிகாரிகளுக்கு முடியாமல் போகவே அவர்கள் உடையவரிடம் சீற்றம்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல்

திகைத்தார்கள். ஸ்ரீராமானுஜர் இருக்கும் வரையில் தங்களிஷ்டப்படி நடந்துகொள்ள முடியாதென்பதைப் புரிந்துகொண்டார்கள். கோவில் உத்தியோகஸ்தர்கள். ஆனால் திடகாத்திரரான ஸ்ரீராமானுஜர் சீக்கிரத்தில் போய்விடமாரென்பதும் அவர்களுக்கு நிதர்சனமாகத் தெரியவே, போகாதவரை போகச் சொல்வதைக தவிர வேறு வழியில்லையென்பதைப் புரிந்துகொண்டார்கள் அதனால் அவரை விஷம் வைத்துத் தீர்த்துக்கட்டவும் முடிவு செய்து அதற்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்தார்கள். ஸ்ரீராமானுஜரின் நெறியான சந்நியாச வாழ்க்கையும் இது விஷயத்தில் அவர்களுக்கு அனுகூலமாயிருந்தது.

ஸ்ரீராமானுஜர் துறவறம் ஏற்ற பின்பு ஆகாரத்தைக் குறைத்துக்கொண்டார். பிரதி தினம் பிக்ஷை எடுத்து, அதில் கிடைத்த உணவை மட்டுமே உண்டு வந்தார். பிக்ஷை எடுக்கும் வீடுகளையும் ஏழு வீடுகளுக்கு மேல் போகாமல் வைத்துக்கொண்டார். அப்படியொரு நாள் அவர் பிக்ஷை பெறும்போது அதில் விஷத்தைக் கலந்துவிட ஒரு கிருகஸ்தரை சரிசெய்து வைத்தார்கள் கோவில் அதிகாரிகள் அந்த கிருகஸ்தன் அந்த ஈனச்செயலுக்கு சம்மதித்தாலும் அவன் மனைவி சம்மதிக்காமல். இந்த மகா பாபத்தை என்னால் செய்யமுடியாது'' என்று மறுத்தாள். ''செய்துதான் ஆகவேண்டும்'' என்று கணவன் மிரட்ட வேறு வழியின்றி ஒப்புக்கொண்டாலும் அந்தப்பாதகச் செயலிலிருந்து உடையவரை தப்புவிக்க ஒரு தந்திரத்தையும் கையாண்டாள். உடையவர் அன்று பிக்ஷைக்கு வந்தபோது விஷம்கலந்த பிரசாதத்தை பிக்ஷை போட்டுவிட்டு சட்டென்று அவர் திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டு உள்ளே சென்றாள்.

அவள் பிரசாதத்தை அளித்த முறை, தண்டனிட்டுச் சென்ற வேகம், அவள் முகத்தில் தெரிந்த சோகம் அனைத்

தையும் உடையவர் கண்டு "இதென்ன?" என்று திகைத்து சிந்தித்தார். பிறகு தமது ஞானதிருஷ்டியாலே உண்மை அறிந்து அங்கிருந்து காவிரிக்குச்சென்று காவிரி நீரிலே விஷங்கலந்த பிரசாதத்தை கரைத்துவிட்டு மடத்துக்குத் திரும்பினர். தமக்கு விஷம் கொடுத்து கொல்ல முயன்றவர்களை பற்றி அவர் மனத்தால் விரோதம் கொள்ளவில்லை. அவர்களைத் திருத்த தாம் உபவாசமிருப்பதே மேல் என்று அன்று முதல் உண்ணுவிரதம் இருக்கத் தொடங்கினர். விரோதிகளைத் திருத்த உண்ணுவிரதம் என்ற ஆயுதம் சிறந்தது என்பதை முதன்முதலாக நிருபித்தவர் ஸ்ரீராமானுஜர்தான். அவர் அன்று காட்டிய வழிதான் பிற்காலத்தில் மகாத்மா காந்திக்கு பெரும் அரசியல் ஆயுதமாயிற்று.

உடையவரின் உண்ணுவிரதம் ஸ்ரீரங்கத்தையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. அது பெரும் நெருப்பாக அவரை தீர்த்துக்கட்ட முயன்ற கோவில் அதிகாரிகளை தகிக்கத் தொடங்கியது. அவர் உண்ணுவிரத மகிமை எங்கும் பரவி திருக்கோட்டியூர் நம்பி காதிலும் விழவே அவர் தமது சிஷ்ய கோஷ்டிகளுடன் உடனடியாக ஸ்ரீரங்கத்துக்குக்கிளம்பி வந்தார். நம்பி வரும் செய்தி கேட்ட உடையவரும் உபவாசத்தால் ஏற்பட்ட பலவீனத்தையும் அசட்டை செய்து குருவை எதிர்கொள்ள தமது சீடர்களுடன் விரைந்தார்.

நல்ல பட்டப்பகல் நேரம். கதிரவன் காவிரி மணலை தணலாகச் செய்திருந்த சமயம். அதிலே நம்பி நடந்து வந்துகொண்டிருந்தபோது நட்ட நடுக்காவிரியிலே அவரை சந்தித்த ஸ்ரீராமானுஜர் கொதிக்கும் மணலில் நெடுஞ்சாண் கட்டையாக விழுந்து குருவுக்கு தண்டன் சமர்ப்பித்தார். கடும் வெயில் அவர் உடலை தகித்தாலும் லக்ஷியம் செய்யவில்லை உடையவர். படுத்தது படுத்தபடி கிடந்தார். நம்பியும் அவரை எழுந்திருக்க நியமிக்காமல் அவர் மணலில் கிடந்ததைப் பார்த்துக்கொண்டே இருந்தார் உடையவர்

நிலையை குரு சகித்தார். ஆனால் உடையவர் சீடரான கிடம்பியாச்சான் (பிரணதார்த்திஹரன்) சகிக்கவில்லை.

"இதென்ன குரு சிஷ்யபாவம்?" என்று இரைந்தே சொன்னார் சினத்துடன். திருக்கோட்டியூர் நம்பியை உஷ்ணமான கண்களால் பார்த்தார். "ஸ்வாமி. நீர் நல்ல குரு. நறுமணமுள்ள புஷ்பமாலையை நெருப்பில் போட்டு கொளுத்துவது உலகில் எங்கேனும் உண்டா?" என்று நம்பியை நோக்கி சீறினார் பிறகு நம்பியின் கோபத்தைப் பற்றியோ உடையவரின் தாபத்தைப்பற்றியோ சிறிதளவும் கவலைப்படாமல் உடையவருடைய திருமேனியை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினார்.

இந்த துணிகரச் செயலைக்கண்டு நம்பியின் சீடர்களும் உடையவரின் மற்ற சீடர்களும் பிரமித்தார்கள், அடுத்து என்ன நடக்குமோ என்று அஞ்சினார்கள். நம்பியின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்கள். ஆனால் நம்பியின் முகத்தில் ஆனந்தச்சாயை விரிந்தது. உதடுகளில் புன்முறுவல் துளிர்த்தது. கண்களில் அனுக்கிரகம் பொங்க நம்பி கிடாம்பியாச்சானை நோக்கினார் சில விநாடிகள். பிறகு அவர் திருவாயிலிருந்து அமுதமென சொற்கள் உதிர்ந்தன. "உம்மைத்தான் காணும் தேடுகிறோம். என் மனம் தேடியது உம்மைப்போன்ற ஒருவரை. இவர் திருமேனியைப் பாதுகாக்கக்கூடியவர் நீர்தாம். அவர் திருமேனியில் உமக்குள்ள பரிவைப் பார்த்தோம். இனி ஸ்ரீ ராமானுஜர் மாதுகரம் பண்ணவேண்டாம் (பிக்ஷைக்கு வீடுத்தேடிப் போக வேண்டாம்) நீரே இவருக்கு இன்று முதல் தளிகை பண்ணி பிக்ஷையாக பிரதி தினம் சமர்ப்பித்து வாரும்" என்று நம்பி நியமித்தார். நம்பியின் கட்டளையை சிரமேற் கொண்ட கிடாம்பியாச்சான் அன்று முதல் அந்தப்பணியை ஏற்றுக் கொண்டு மடத்தில் எழுந்தருளியிருந்தார்.

இந்தக்காலத்தில்தான் ஸ்ரீ ராமானுஜர் கத்யத்ரய கிரந்தங்களை இயற்றினார். ஸ்ரீமந் நாராயணனே பரப்ரம்மம் (பரம்பொருள்), அவனுக்கு மேல் யாதொரு தெய்வமும் கிடையாது, என்ற நல்லறிவை வலியுறுத்தும் சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், வைகுண்டகத்யம் ஆகிய மூன்று நூல்களை (கத்யத்ரயம்) ஸ்ரீராமானுஜர் இயற்றினார். அத்துடன் நித்யக்ரந்தம் என்ற வழிமுறை நூலையும் இயற்றினார். இந்த கிரந்தங்களின் சிறப்பும் ஸ்ரீராமானுஜரின் மேதாவிலாசத்தை எங்கும் பரப்பின. அவரது புகழ் தென் எல்லைகளைக்கடந்து வடக்கேயும் சென்று காசியிலும் புகுந்தது. காசியிலிருந்த மகாவித்வானான யக்ஞமூர்த்தி என்பவர் காதிலும் விழுந்தது. அப்பொழுதுதான யக்ஞமூர்த்தி காசி வித்வான்களை வாதத்தில் வென்று வெற்றிக் கொடி நாட்டியிருந்தார். ஸ்ரீராமனுஜ வைபவத்தைக் கேட்டதும் தனது கொடியை தெற்கிலும் நாட்ட உறுதி கொண்டு ஸ்ரீரங்கத்தை நாடிப் புறப்பட்டார்.

(தொடரும்)

# கண்ணன் கதைகள்

தீபம். நா. பார்த்தசாரதி

## 45. இறுதிக்கால வாழ்வு

ஒரு சமயம் கண்ணனைப் பார்ப்பதற்காக அருச்சுனன் துவாரகைக்கு வந்திருந்தான். அப்போது துவாரகையின் துணை நகரமாகிய குசத்தலியில் ஒரு துன்பநிகழ்ச்சியை அவன் கண்டான். ஒரு அந்தணனுடைய மனைவிக்குக் குழந்தை பிறந்து பிறந்து உடனடியாக இறந்து போய்க் கொண்டிருந்தது. அப்படி எட்டு குழந்தைகள் வரை இறந்துபோய் விட்டன. ஒவ்வொரு குழந்தை இறக்கும்போதும் "நாட்டில் ஆட்சி ஒழுங்கோடும் தர்மத்தோடும் நடைபெற்றால் இப்படிக் குழந்தைகள் தொடர்ந்து இறக்குமா? ஆட்சியில் தர்மமில்லை. அதனால்தான் இவ்வளவு பாவங்கள்" என்று அந்தணர் குறைபட்டுக் கொண்டிருந்தார். ஒன்பதாவதாக ஒரு குழந்தையும் பிறந்து இறந்துவிட்டது. அப்போது அந்தணர் கதறிய கதறலை அந்தப் பாதையாக வந்த அருச்சுனன் கேட்க நேர்ந்தது. அவன் உடனே அவருக்கு முன்னால் சென்று, "ஐயா நீங்கள் கவலைப்படாதீர்கள். அடுத்த முறை உங்கள் மனைவிக்குக் குழந்தை பிறக்கும்போது எனக்குச் சொல்லியனுப்புங்கள். நான் வந்து அது இறந்து விடாமல் காப்பாற்றுகிறேன்" என்று கூறினான். அதைக் கேட்டு அந்தணர் சிரித்தார்.

"ஐயா! இந்த நகரத்தின் இரு தெய்வங்களைப்போல விளங்கி வரும் பலராமன், கண்ணனைப் போன்றவர்களாலேயே என் குழந்தைகளைக் காப்பாற்ற முடியவில்லை. உங்களால் எங்கே ஐயா முடியப்போகிறது?" என்று ஏளன

மாகக் கேட்டார் அவர். "அந்தணரே! என்னை இன்னு ரென்று தெரிந்து கொள்ளாமலே நீங்கள் பேசுகிறீர்கள். நான் மூவுலகும் வெற்றிகொள்ளும் ஆற்றல் படைத்த அர்ச்சுனன். என்னால் உங்கள் குழந்தையைக் காப்பாற்ற முடியும்" என்று உறுதியாக அவரிடம் கூறிவிட்டு விடை பெற்றான் அருச்சுனன்.

சில காலத்துக்குப் பின் அந்தணருடைய மனைவிக்கு ஒன்பதாவது குழந்தை இறந்த துயரம் மறக்கும்படி பத்தா வதாக ஒரு குழந்தை பிறந்தது. அந்தணர் உடனே அருச் சுனனிடம் போய் செய்தி கூறினார். அவர் அருச்சுனனைக் கூப்பிட்டுக் கொண்டு திரும்பி வருவதற்கும் பத்தாவது குழந்தையும் இரண்டு மூன்று தடவை அழுதுவிட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதற்கும் சரியாயிருந்தது. அந்தணன் அருச்சுனனை மதிக்காமல் ஓடிப்போய், கண்ணனிடம் முறையிட்டான். தன்னால் முடியவில்லையே என்ற அவமானத்தால் வெட்கமுற்று நெருப்பு மூட்டி இறப்பதற்கு முற்பட்டான் அருச்சுனன்.

அப்போது கண்ணன் அவனுக்கு முன்னால் தோன்றி "அசட்டுத்தனமாக ஏதாவது செய்யாதே! என்னோடு வா, நாமிருவருமாகச் சேர்ந்து தேடி அந்தக் குழந்தைகளைக் கண்டுபிடிப்போம்" என்று அவனையும் உடனழைத்துக் கொண்டு கிளம்பினான். அவர்கள் இருவரும் எட்டமுடியாத தொலைவுக்குப் பயணம்செய்து ஒளிமயமான பெருநகரம் ஒன்றையடைந்து அங்குள்ள மூல தெய்வமான விராட் புருடனைச் சந்தித்து அரும்பாடுபட்டு அந்த குழந்தைகளின் உயிர்களை மீட்டுக் கொண்டு திரும்பினார்கள்

கண்ணனுடைய வாழ்வின் இறுதி எல்லையில் உலகம் முழுவதும் அவனுடைய கருணை வெள்ளம் நிறைந்து காட்சி யளித்தது. இன்னதென்று வரம்புபடுத்தி அறியமுடியாத

அவன் பெருமைகளை எண்ணி எண்ணி மண்ணுலகத்து மக்களெல்லாம் களிப்படைந்து கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட கண்ணன் எந்த யாதவ மரபில் பிறந்தானே அந்த மரபையழித்துத் தானும் அழிந்து வைகுண்டத்துக்குச் செல்லும்படியான முடிவு தான் இறுதியில் ஏற்பட்டது.

கண்ணனுக்கு மிகவும் வேண்டியவர்களான முனிவர்கள் சிலர் பிண்டராகம் என்கின்ற தலத்தில் வந்து தங்கியிருந்தார்கள். அந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த யாதவகுமாரர்கள் சிலர் முனிவர்களிடத்தில் இழிந்த முறையில் நடந்து கொண்டார்கள். சாம்பவதியின் புதல்வனுகிய சாம்பவன் என்பவனுக்குப் பெண்வேடம் போட்டு அவன் கருவுற்றிருக்கும் பெண்போல் தோன்றும்படி வயிற்றிலும் எதையோ வைத்துத் தூக்கிக்கட்டி முனிவர்களுக்கு முன்னல் கொண்டுபோய் நிறுத்திஞர்கள் யாதவ இளைஞர்கள்.

''முனிவர்களே! இந்தப் பெண் கருக்கொண்டிருக்கிருள். இவளுக்கு ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா? உங்கள் தவ வலிமையினுல் இதை அறிந்து கூறுங்கள் பார்ககலாம்' என்று முனிவர்களைக் கேட்டார்கள்

அந்த யாதவ குமாரர்கள் ஆண்பிள்ளைக்குக் கருக்கொண்ட பெண் போல வேடமிட்டுத் தங்களை ஏமாற்றுகிருர்கள் என்பது முனிவர்களுக்குத் தெரிந்துவிட்டது. முனிவர்கள் கடுஞ்சினம் கொண்டனர்.

''ஆணும் பிறக்காது, பெண்ணும் பிறக்காது. உங்களுடைய குலத்தையே சர்வநாசம் செய்யப்போகின்ற இரும்பு உலக்கை ஒன்றை பெறுவாள் இந்த வேடதாரிப் பெண்'' என்று ஆத்திரத்தோடு சாபம் கொடுத்தார்கள் அந்த முனிவர்கள்.

யாதவ வாலிபர்கள் பயந்துபோய் அங்கிருந்து சென்று பெண் வேடமிட்டவனுடைய வேடத்தைக் கலைத்தபோது உண்மையாகவே ஒரு பெரிய இரும்பு உலக்கை வெளிப் பட்டது. திடுக்கிட்டுப் பயந்தார்கள் அவர்கள். அந்த உலக்கையை எடுத்துக்கொண்டு போய் அப்படியே உக்கிர சேன மன்னனுக்கு முன்னால் வைத்துப் பயந்துகொண்டே நடந்ததைச் சொன்னார்கள் யாதவ வாலிபர்கள். எல்லா வற்றையும் கேட்டுவிட்டு உக்கிரசேனன் முதலிய எல்லா யாதவர்களுமே நடுங்கிப் பயந்தார்கள். அந்த உலக்கை யைப் பொடி செய்து தூள் தூளாக்கிக் கடலில் எறிந்துவிடச் செய்தார்கள் அவர்கள். அப்படி எறிந்த அந்தத் தூள்க ளெல்லாம் கரைகளில் ஒதுங்கிப் பெரும்பெரும் கோரைப் புற்களாக முளைத்தன. உலக்கைத் தூளில் ஒரு பகுதியை மீன் ஒன்று விழுங்கிவிட்டுக் கடலில் வளர்ந்தது. அதையும் மற்றமீன்களையும் ஒரு செம்படவன் வலை விரித்துப் பிடித்துக் கொண்டு போனான். அந்த மீனை அறுத்தபோது அதன் வயிற்றிலிருந்த உலக்கையின் இரும்புத் துணுக்கை எடுத்துத் தூர எறிந்துவிட்டார்கள் அந்தத் துணுக்கை உருபதன் என்ற ஒரு வேடன் எடுத்துத் தன் 'அன்பின் நுனியில பொருத்தி வைத்துக் கொண்டான்.

யாதவகுலம் அழிந்தொழிந்து போவதற்குக் காலம் வந்துவிட்டதனால்தான் இப்படியெல்லாம் நடக்கிறதென்று கண்ணனுக்குத் தெரிந்தாலும் ஒரு தடுப்பு ஏற்பாடும் செய் யாமல் அவன் வாளா இருந்துவிட்டான். "அழிவு வருகிற வழியிலே இயற்கையாக வந்துவிட்டுப் போகட்டும். அதை நான் தடுத்து ஆகப்போவதில்லை" என்று சும்மா இருந்தான் கண்ணன். தன் மண்ணுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு பழைய தெய்வ பதவிக்குப் போக வேண்டிய காலம் அவனுக்கும் நெருங்கி வந்துவிட்டது.

(தொடரும்

# ஹாஸ்யக் கதைகள்

ஒரு ஸ்வாமி நல்ல வித்வான் சாஸ்த்ரபாண்டித்யத்தில் நிகரற்றவராயினும் லௌகிக ஜ்ஞானம் சிறிதுமில்லாதவர். இவர் சில ஹவ்ய கவ்ய 'விசேஷங்களுக்காக வெளியூர் போயிருந்தார் அங்கே வேஷ்டி உத்தரீயம் கொஞ்சம் ரூபாய்கள் சில்லறைகள் கிடைத்தன. அவற்றுடன் திரும்பி ஸ்வக்ராமம் வருகிறார். பட்டப் பகலில் தான வருகிறார் சில கள்ளர்கள் வந்து வழிபறிக்கத் தொடங்கினார்கள் ''ஹந்த! அஹந்யபி கதம் தஸ்கராச் சோரயந்தி [அடடா பகலிலுங்கூட திருடர்கள் வந்து அபஹரிக்கிறார்களே! இது என்ன ஆச்சரியமாயிருக்கிறதே] என்று தம்முள் தாம் வியந்து கூறுகின்றார். வந்த கள்வர்கள் இவருடைய அரை

## ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்

# அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

வேஷ்டி தவிர மற்றதையெல்லாம் கொள்ளை கொண்டார்கள். இவருடைய மூட்டையில் ரூபாயாக 4 ரூபா இருந்தது வந்த கள்வர்களோ மூவர். 4 ரூபாயை ஸரிஸமமாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாமல் சில்லறை மாற்ற வேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது இந்த வித்வான் ஸ்வாமி அந்த கள்ளர்களை நோக்கி உங்களுக்குச் சில்லறை வேண்டியிருக்கிறதா? எத்தனை ரூபாய்க்கு வேணும்? என்றார் 'எவ்வளவிருந்தாலும் வேண்டியது தான், இருக்கிற சில்லறையைக் கொடுங்கள், ரூபா கொடுக்கிறோம்' என்றார்கள். ஹவ்ய கவ்யங்களில் சில்லறையாக கிடைத்தவற்றை கச்சத்திற்குள்ளே முடிபோட்டு வைத்திருந்தார். அதை யவிழ்த்து எண்ணிப்பார்த்து ஸரியாக நாலுரூபாய்க்கு சில்லறையிருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள் ரூபாய் கொடுங்கள்' என்று சொல்லிக் கொண்டே சில்லறைகளையெல்லாம் அவர்களிடம் கொடுத்துவிட்டு ரூபா ரூபா என்று கையேந்தினார். மேல் நிகழ்ச்சியை என்ன சொல்லுவது! ''ஹந்த! சோரோபி அப்ராமாணிக:' என்கிறார் வித்வான். கள்ளன் பொய் சொல்ல மாட்டான், திருடனே தவிர என்றிருந்தாராம். கள்ளன் கூட பொய் சொல்லுகிறானே யென்று ஆச்சரியமாக பேசிக்கொண்டே போனார். அந்த ஆச்சரியத்தில் அவர்க்குப் பணம் பறியுண்ட துக்கம் தெரியவில்லை

# ராசி பலன்

## சுபஸ்ரீ ரக்தாக்ஷி நாம ஸம்வத்ஸரம் ஆனிமாதம்
## (15—6—84 முதல் 15—7—84 வரை)

**மேஷம் :** (அசுவனி பரணி கார்த்திகை ¼) மாதத்தின் முற்பகுதியில் அதிக நலம் காணலாம். பெரியோர்களின் ஆசிர்வாதங்கள் கிடைக்கும். மாதத்தின் மத்தியில் சற்று நலம் பாதிக்கப்படும். எச்சரிக்கையாக இருப்பது நலம் மாத இறுதியில் சங்கடங்கள் குறையும். புதிய முயற்சிகள் பலிக்கும். சுபிட்சமும் ஏற்படும்.

**ரிஷபம் :** (கார்த்திகை ¾ ரோஹிணி மிருகசீருஷம் ½) தங்களது தொழில் சிறந்து விளங்கும் நேரம் இது. அதிர்ஷ்டம் உண்டு. குடும்பத்தில் சுபவிரையம் தோன்றும். மனத்தில் ஒருவித மகிழ்ச்சி இருந்துவரும். சகல காரியங்களையும் உன்னதமான முறையில் நடத்தலாம் தினசரி காரியங்கள் பழுதில்லாமல் நடக்கும்.

**மிதுனம் :** மிருகசீருஷம் ½ திருவாதிரை புனர்பூசம் ¾ சிறு, சிறு கஷ்டங்களை அவ்வப்போது அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எதிலும் நிதானம் தேவை. பொருளாதார நிலை சரியில்லை. மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொள்ளவும். இறைப்பற்று அவசியம். ஓய்வு தேவை.

**கடகம் :** புனர்பூசம் ¼ பூசம் ஆயில்யம் தங்களது புத்திரர்களால் மேன்மையுண்டு. தங்களது செல்வாக்கு அதிகரிக்கும் காலம் இது. உழைப்பிற்கு தகுந்த ஊதியம் பெறலாம். பலருக்கும், உமது சிந்தனை பயன்படும். நல்

லோர்களின் நட்பு கிடைக்கும். சுகபோகங்களையும், கௌரவங்களையும் அடையவேண்டிய நேரம்.

சிம்மம் : (மகம் பூரம் உத்திரம் $\frac{1}{4}$) மாதத்தில் ஆரம்பம் நன்றாக உள்ளது. குடும்பத்தில் ஒரு சிறு குழப்பம் தோன்றலாம். அமைதியாக இருந்து வந்தால் அனுபவம் பெறலாம். செல்வம்-புகழ்-மாத இறுதியில் கிடைக்கும். நல்வாய்ப்புகளும் இருக்கிறது. தங்களது செய் தொழிலில், குழப்பம் ஏற்படலாம். கவலைப்படாமல் இறைவனிடம் சிந்தனையைச் செலுத்துங்கள்.

கன்னி : (உத்திரம் $\frac{1}{4}$ அஸ்தம் சித்திரை $\frac{1}{2}$) அலைச்சல். மனது அமைதியின்மை காணப்படும். தங்களது காரியங்கள் யாவும் சிரமத்தின் பேரில் நடைபெறும். மாத மத்தியில் உற்சாகம் தோன்றும். சோதனை யாவும் எதிர்காலத்தின் நன்மைக்கே தான். பதட்டப் படாமல் இருக்கவும். மன அமைதி பெறலாம். உடல் நலம் காணலாம். பெரியோர்களது ஆசியைப் பெறுங்கள்.

துலாம் : (சித்திரை $\frac{1}{2}$ சுவாதி விசாகம் $\frac{3}{4}$) இந்த மாதம் உங்களது குடும்பத்தில் நலம் காணும். பெற்றோர்களின் நலத்தை நாடுவீர்கள். மனத்தில் உல்லாசம் பெருகும், உங்களது சொல்வாக்குப் பலிக்கும். செல்வாக்குப் பெருகும் நேரம். உல்லாசமான பிரயாணம் ஒன்று அமையும்.

விருச்சிகம் : (விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் கேட்டை) அவ்வப்போது சிறு சிறு சங்கடங்களை அனுபவிக்க வேண்டியது வரும் சரீரங்களால் சற்று நலக்குறைவு தோன்றும். அலைச்சல் மூலம் காரியங்கள் நிறைவேறும். எதிர் பாராத அதிர்ச்சி தரும் விஷயம் ஒன்று கேள்விப்பட வேண்டியது வரும். எம் பெருமானை தியானம் செய்து வாருங்கள்.

தனுர் : (மூலம் பூராடம் உத்திராடம் $\frac{1}{4}$) மாத ஆரம்பத்தில் பிரயாணங்கள் அமையும் பெற்றோர்களின் நலம் காண இந்தப் பிரயாணம் அமையும். மாத ஆரம்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வாழ்க்கையில் வெற்றி மாத இறுதியில் ஆரம்பமாகும். பொதுவாக வீண் குழப்பம் இல்லாமல் இருப்பது அதிக நலம் தரும்.

மகரம் : (உத்திராடம் $\frac{3}{4}$ திருவேரணம் அவிட்டம் $\frac{1}{2}$) நண்பர்களின் நல்லாதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். வெற்றிக்கு மேல் வெற்றி என்பது உங்களுக்கு ஏற்படும். குடும்பத்தில் சுப விரயங்களும் ஏற்படும். உத்தியோகத் துறை நல்ல பலன் அளிக்கும். கௌரவம் வந்து சேரும். நல்ல மகரம் நலம் காணும் மகரம்,

கும்பம் : (அவிட்டம் $\frac{1}{2}$ சதயம் பூரட்டாதி $\frac{3}{4}$) தங்களுக்கு இடமாற்றம் ஏற்படும். கூட்டு முயற்சி பலனளிக்கும். வரவு குறைவாகவும் செலவு அதிகமாகவும் இருந்துவரும். மாத ஆரம்பத்தில் குழப்பம உண்டு. மாத மத்தியில் நீங்கும்

மீனம் : (பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திராட்டாதி ரேவதி) கடுமைமையான உழைப்புத் தேவை. மனத்திற்கு உற்சாகமான பொழுது போக்குகளில் உங்கள் பொழுது செலவாகும். உங்களை சுற்றியுள்ளவர்கள், உங்களை மேன்மேலும் குழப்பத்திற்கு ஆளாக்குவார்கள். தெய்வ தரிசனம் நலம் தரும். உறவினரால் நன்மை உண்டு.

---

## கோசார்யன் சந்தா

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ 250 |
| வருடச் சந்தா | ரூ 15 |

# உத்ஸவ விவரங்கள்

| ஆனி | ஜூன் | |
|---|---|---|
| 14 | 28 | திருவல்லிக்கேணி கோடை உத்ஸவம்<br>திருவள்ளூர் தெப்பம். |
| | ஜூலை | |
| 23 | 7 | ஆனிகருடன் (பரதத்வநிர்ணயம்)<br>பெரியாழ்வார் சாற்றுமுறை<br>வடக்குத்திருவீதிப்பிள்ளை சாற்றுமுறை |
| 25 | 9 | திருவல்லிக்கேணி அழகியசிங்கர்<br>கருட ஸேவை. நாதமுனிகள் சாற்றுமுறை |
| 29 | 13 | திருவல்லிக்கேணி திருத்தேர். |
| 30 | 14 | காஞ்சி ஜ்யேஷ்டாபிஷேகம். |



Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005. Edited and Published by M. A. Venkata Krishnan. 7, South Mada Street Triplicane Madras-5.

| | ஆங். | ஆனி | நாள் | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|
| | 15 | 1 | வெ | துவி 36-40 | |
| | 16 | 2 | ச | திரு 38-20 | பூராடம் 44-34 |
| | | | | | உத்தராடம் 48-4 |
| | 17 | 3 | ஞா | சதி 41-11 | |
| | 18 | 4 | தி | பஞ் 45-1 | திருவோணம் 52-4[illegible] |
| | 19 | 5 | செ | ஷஷ் 49-31 | அவிட்டம் 58-18 |
| | 20 | 6 | பு | ஸப் 54 22 | சதயம் 60-0 |
| | | | | | சதயம் 4-31 |
| | 21 | 7 | வி | அஷ் 59-15 | |
| ஜூன் 84 | 22 | 8 | வெ | நவ 60-0 | பூராட்டாதி 10 55 |
| | 23 | 9 | ச | நவ 3- 2 | உத்திராட்டதி 17-1[illegible] |
| | | | | | ரேவதி 23-2 |
| | 24 | 10 | ஞா | தச 7-19 | |
| | 25 | 11 | தி | ஏகா 9-55 | அசுவனி 27-58 |
| | 26 | 12 | செ | துவா 11-22 | பரணி 31 53 |
| | 27 | 13 | பு | திர 11-30 | கார்த்திகை 34-35 |
| | 28 | 14 | வி | சசி 10-25 | ரோகிணி 36-2 |
| | 29 | 15 ● | வெ | ● 8·7 | மிருகசிருஷம் 3[illegible]-[illegible]6 |
| | 30 | 16 | ச | பிர 4-46 | திருவாதிரை [illegible]5-21 |
| | | | | | புனர்வசு 33-27 |
| | 1 | 17 | ஞா | துவி 0-30 | பூசம் 30-44 |
| | | | | திரு 55-1 | |
| | 2 | 18 | தி | சது 50-0 | ஆயில்யம் 2[illegible]-26 |
| | 3 | 19 | செ | பஞ் 44-3 | மகம் 23-40 |
| | 4 | 20 | பு | ஷஷ் 37-56 | பூரம் 19-38 |
| | 5 | 21 | வி | ஸப் 31-52 | உத்ரம் 15-32 |
| ஜூலை | | 22 | வெ | அஷ் 26-0 | ஹஸ் 11-35 |
| | | 23 | ச | நவ 20-32 | சித்திரை 8-0 |
| | 8 | 24 | ஞா | தச 15-40 | ஸ்வாதி 4-57 |
| | 9 | 25 | தி | ஏகா 11-32 | விசாகம் 2-37 |
| | | | | | அனுஷம் 1-9 |
| | 10 | 26 | செ | துவா 8-17 | கேட்டை 0-45 |
| | 11 | 27 | பு | திர 6-8 | மூலம் 1-31 |
| | 12 | 28 | வி | சசி 5-9 | |